வைப்பகம்

2020 ஒத்தோபர் - திசெம்பர் மலர் 5 இதழ் 10 - 12

அறிவுத் தேடலின் மையம்

ரூ. 20/-

02 வைப்புக் காப்புறுதியில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பணம்

09 பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கும் நாணயக் கொள்கைக்குமிடையிலான இணைப்பு உலகளாவிய மற்றும் இலங்கையின் அனுபவம்

15 மத்திய வங்கிகளில் இடர்நேர்வு முகாமைத்துவம்

22 தடயவியல் கணக்காய்வொன்றின் வகிபாகம் என்ன?

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எழுத்தாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

ஆண்டுச் சந்தா (அஞ்சல் கட்டணம் உட்பட): ரூ.320/-

வைப்புக் காப்புறுதியில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பணம்

எஸ். டபிள்யு. எம். கே. விஜயரத்ன
மூத்த உதவிப் பணிப்பாளர்
தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

1) வைப்புக் காப்புறுதி மற்றும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பணத்திற்கான அறிமுகம்

வைப்புக் காப்புறுதி என்பது வைப்புக்களை ஏற்கின்ற நிதியியல் நிறுவனமொன்று முறிவடைந்த வைப்பாளர்களுக்கான அதன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யமுடியாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் வைப்பாளர்களுக்கு வைப்புக்களில் குறிப்பிட்டளவிலானதொரு தொகை (பாதுகாப்பு வரையறை) மீளளிக்கப்படும் என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வைப்புக் காப்புறுதி அதிகாரசபையினால் (வைப்புக் காப்புறுதியாளர்) வழங்கப்படும் காப்புறுதி பாதுகாப்பாகும்.

வைப்புக் காப்புறுதி முறைமை என்பது வைப்புக் காப்புறுதியாளர், உறுப்பினர் நிறுவனங்களுடனான அதன் உறவுகள், வைப்புக் காப்புறுதி தொழிற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் நிதியியல் மற்றும் தீர்மானங்களைச் செய்முறைப்படுத்தும் பாதுகாப்பு வலையமைப்பு பங்கேற்பாளர்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது. உதாரணமாக, வைப்புக் காப்புறுதியாளர் தவிர்ந்த, அத்தகைய பாதுகாப்பு வலையமைப்பு பங்கேற்பாளர்கள் மத்திய வங்கி, வங்கி மேற்பார்வை அதிகாரிகள், தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரிகள் போன்றவர்களை உள்ளடக்குகிறது. வைப்புக் காப்புறுதி முறைமையில் உறுப்பினர் நிறுவனங்கள் பங்கேற்பாளர்களாவர். வைப்புக் காப்புறுதி முறைமைகள் இரண்டு முக்கிய வகை நிதிகளைப் பேணுகின்றன. அதாவது எதிர்வு மதிப்பீடு (எதிர்காலக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்தல் மற்றும் வைப்புக் காப்புறுதியாளரின் தொழிற்பாட்டு மற்றும் அதனுடன் தொடர்பான செலவுகளைப் பூர்த்தி செய்தல் ஆகிய நோக்கங்களுடன் கிரமமான கட்டுப்பணச் சேகரிப்புக்களூடாக நிதியம் ஒன்றுதிரட்டப்படுகிறது). மற்றையது உண்மையான மதிப்பீடு (வைப்புக் காப்புறுதிக் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்காக உறுப்பினர் நிறுவனங்கள் முறிவடைந்ததன் பின்னர் தாக்குப்பிடித்துக் கொண்டிருக்கும் உறுப்பினர் நிறுவனங்களிலிருந்து மாத்திரம் சேகரிக்கப்பட்டவை).

இலங்கையைப் பொறுத்தவரை, வைப்புக் காப்புறுதி அதிகாரசபை என்பது (திருத்தப்பட்டவாறான) 2010ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வைப்புக் காப்புறுதி திட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் (ஒழுங்குவிதிகள்) நிறுவப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டமாகும். உறுப்பினர் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட அனைத்து வங்கிகளையும் நிதிக் கம்பனிகளையும் உள்ளடக்குகிறது. ஒழுங்குவிதிகளின் நியதிகளில், இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம் (நிதியம்) நிறுவப்பட்டிருக்கிறது. இது மதிப்பிடப்பட்ட நிதியமொன்றாக இருப்பதுடன் நிதியத்திற்கான ஆரம்ப மூலதனம் கைவிடப்பட்ட சொத்து நிதியத்திலிருந்து இலங்கை மத்திய வங்கியினால் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் நிறுவப்பட்டமையுடன் தொழிற்பாடுகளை நிறுத்தவிருந்த சுயவிருப்பு வைப்புக் காப்புறுதி நிதியத்தினாலும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தினாலும் வழங்கப்பட்டது. அதன் பின்னர் நிதியத்திற்கான முக்கிய நிதியிடல் மூலம் உறுப்பினர் நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்படும் கிரமமான கட்டுப்பணத்தினூடாகப் பெறப்படும்.

2) இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பணம் என்றால் என்ன?

வைப்புக் காப்புறுதியில் கட்டுப்பண முறைமை இரண்டு முக்கிய வகைகளைக் கொண்டுள்ளது. அதாவது ஒரே வீதத்திலமைந்த கட்டுப்பணம் மற்றையது வேறுபட்ட வீதங்களிலமைந்த கட்டுப்பணம். ஒரே வீதத்திலமைந்த கட்டுப்பணத்தின் கீழ், அனைத்து உறுப்பினர் நிறுவனங்களும் உறுப்பினர் நிறுவனங்களின் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை அல்லது உறுப்பினர் நிறுவனங்களினால் எதிர்நோக்கப்படும் இடர்நேர்வினைக் கருத்திற்கொள்ளாது கணிக்கப்பட்ட ஒரே வீதத்தினைப் பிரயோகிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. ஒரே வீதத்திலமைந்த கட்டுப்பண முறைமைகளை விளங்கிக்

கொள்வதும் நிருவகிப்பதும் இலகுவானதாகும். இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பண முறைமையின் கீழ், வேறுபட்ட உறுப்பினர் நிறுவனங்கள் அவற்றின் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினைப் பொறுத்து வேறுபட்ட வீதங்களைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்ட கட்டுப்பணத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட/ வேறுபட்ட கட்டுப்பண முறைமைகளைக் கொண்டிருப்பதன் குறிக்கோள்கள் வருமாறு:

(அ) ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றச் செய்யும் விதத்தில் உறுப்பினர் நிறுவனங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு.

(ஆ) உறுப்பினர் நிறுவனங்களை அவற்றின் இடர்நேர்வுத் தோற்றப்பாடுகளுக்கிணங்க வேறுபடுத்துவதற்கு.

(இ) கட்டுப்பணத்தினைச் செலுத்தும் முறைகளின் நியாயமான தன்மையினை அதிகரிப்பதற்கு, அதாவது, வேறுபட்ட கட்டுப்பண முறைமைகள் இறுதியில் உயர்ந்த இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினைக் கொண்ட உறுப்பினர் நிறுவனம், தாழ்ந்த இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினைக் கொண்ட உறுப்பினர் நிறுவனங்களிலும் பார்க்க உயர்ந்த கட்டுப்பணத்தைச் செலுத்த வைக்கின்றன.

(ஈ) பொதுவாக, இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பண முறைமைகள், உறுப்பினர் நிறுவனங்களின் ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை அதிகரிப்பதனூடாக முறைமை உறுதிப்பாடு ஊக்குவிக்கப்படுகிறது.

ஒரே வீதத்திலமைந்த கட்டுப்பண முறைமைகளுடன் ஒப்பிடுகையில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பண முறைமையினை நிருவகிப்பதும் தொழிற்படுத்துவதும் இடர்ப்பாடு மிகுந்ததாகும். எனினும், மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களைக் கருத்திற்கொள்ளும் போது இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பண முறைமையினை வெற்றிகரமாக நடைமுறைக்கிடுவது மிகப்பொருத்தமானதாக இருக்கிறது.

இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பண முறைமை வைப்புக் காப்புறுதியில் காணப்படக்கூடிய தார்மீக தீங்குகளைக் கட்டுப்படுத்த உதவும். எனினும், பிறஸ்கொட் இன் ஆராய்ச்சியின் அடிப்படையில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பண முறைமைகள் தார்மீக தீங்குகளைக் கட்டுப்படுத்தப் போதுமானவையல்ல என்ற முடிவிற்கு வரச்செய்கிறது.

3) வைப்புக் காப்புறுதி நிதியிடல் மற்றும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பணம் - ஏற்புடைத்தான மிகச் சிறந்த நடைமுறைகள்

வைப்புக் காப்பறுதியாளர்களின் பன்னாட்டுச் சங்கம் மற்றும் வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழு என்பன காத்திரமான வைப்புக் காப்புறுதி முறைமைகளுக்கான மையக் கோட்பாடுகளை விடுத்திருக்கின்றன. இவை எந்தவொரு காத்திரமான வைப்புக் காப்புறுதி முறைமைகளினாலும் பின்பற்றப்பட வேண்டிய அடித்தள அளவுக்குறியீடுகளாகத் தொழிற்படுகின்றன. காத்திரமான வைப்புக் காப்புறுதி முறைமைகளினால் பின்பற்றப்பட வேண்டிய அத்தகைய 16 திருத்தப்பட்ட கோட்பாடுகள் காணப்படுகின்றன. மேலும், மையக் கோட்பாடு இல.09 மூலங்கள் மீதான கோட்பாட்டினையும் வைப்புக் காப்புறுதி நிதியத்தின் பயன்பாடுகளையும் தருகிறது. கோட்பாடு 9இன் நியதிகளில், வைப்புக் காப்புறுதியாளர் நிதிகளின் கிடைப்பனவினை எந்நேரமும் ஆயத்தநிலையில் வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் வைப்பாளரின் கோரல்கள் சரியான முறையில் மீளளிப்புச் செய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தேவையான நிதியிடல் பொறிமுறைகளையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும், வைப்புக் காப்புறுதியின் கொடுப்பனவுச் செலவு உறுப்பினர் நிறுவனங்களினால் வழங்கப்படல் வேண்டும். மையக் கோட்பாடு 9இன் கீழ் தரப்பட்டுள்ள இன்றியமையாத பிரமாணங்கள் கீழே சுருக்கமாகத் தரப்படுகின்றன.

i) வைப்புக் காப்புறுதி நிதியிடல், மதிப்பீட்டு அடிப்படையில் இருத்தல் வேண்டுமென்பதுடன் நிதியிடல் ஏற்பாடுகள் சட்டம்/ ஒழுங்குவிதிகளின் மூலம் தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்டு நிறுவப்படுதலும் வேண்டும்.

ii) உறுப்பினர் நிறுவனங்கள் வைப்புக் காப்புறுதி முறைமையின் நிதியிடலுக்குப் பொறுப்புடையனவாகும்.

iii) வைப்புக் காப்புறுதியாளரொருவரை நிறுவுவதற்கு உதவுகின்ற விதத்தில் ஆரம்ப நிதியிடல் அனுமதிக்கப்படுகிறது. மேலும், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஆரம்ப நிதியிடலை, வைப்புக் காப்புறுதியாளர் அனைத்துக் கட்டுப்பணத்தினையும் அல்லது அதன் ஒரு பகுதியைக் குறைப்பதற்கு முன்னதாக மீளச்செலுத்துதல் வேண்டும்.

iv) உத்தரவாதப்படுத்தப்பட்ட முன்கூட்டியே ஒழுங்குசெய்யப்பட்ட அவசரகால திரவத்தன்மை நிதியிடல் பொறிமுறையொன்று வைப்புக் காப்புறுதியினால் ஏற்படுத்தப்படல் வேண்டும். மேலும், அத்தகைய ஏற்பாடுகள் தேவையான பொழுது சரியான நேரத்தில் காத்திரமான விதத்தில் அணுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக முன்கூட்டியே நடைமுறைக்கிடப்படுதல் வேண்டும்.

v) மதிப்பீட்டு வைப்புக் காப்புறுதி நிதியம் உருவாக்கப்பட்டதன் பின்னர், இலக்கு நிதியின் அளவு தெளிவான அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். நிலையான மற்றும் வெளிப்படையான பிரமாணம் என்பன காலாந்தர மீளாய்விற்குட்பட்டிருத்தல் வேண்டும். மேலும், இலக்கு நிதியின் அளவினை எய்துவதற்கு நியாயமான நேரக் கட்டமைப்பு உருவாக்கப்படுதல் வேண்டும்.

vi) வைப்புக் காப்புறுதியாளர்கள் ஆற்றல்வாய்ந்த முதலீட்டிற்கும் அதனது நிதியத்தின் முகாமைத்துவத்திற்கும் பொறுப்புடையவராவர்.

vii) வைப்புக் காப்புறுதியாளர் மத்திய வங்கியில் நிதியினை வைத்திருக்கலாம் என்பதுடன் வைப்புக் காப்புறுதியாளர் கணிசமான நிதியினை வங்கிகளில் முதலீடு செய்வதனை மட்டுப்படுத்தும் விதத்தில் விதிகள் நிறுவப்படல் வேண்டும்.

viii) வைப்புக் காப்புறுதியாளர் தீர்மானத்தினை எடுக்கும் அதிகாரத்தினைக் கொண்டிராத போது, சட்டக் கட்டமைப்பொன்றிற்குள், குறிப்பிட்ட சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்குட்பட்டு தீர்மானத்திற்கான நிதியினைப் பயன்படுத்துவதற்கான தேர்வினைக் கொண்டிருக்கிறது.

ix) வைப்புக் காப்புறுதி வருமானம்/ சேகரிப்பிற்கு அரசாங்கத்தினால் வரி விதிக்கப்படவோ, வீதமானது மற்றைய கம்பனி வரிகளுக்குக் கடுமையானதாகவோ அல்லது விகிதாசாரமற்றதாகவோ அல்லது நிதியத்தின் திரட்சிக்கு நியாயமற்ற விதத்தில் முட்டுக்கட்டையாகவோ இல்லாதிருப்பது.

x) வைப்புக் காப்புறுதியாளர் வேறுபட்ட கட்டண முறைமைகளைப் பயன்படுத்துவதனால் பின்வருவன முக்கியமானவையாகும்:

அ) கட்டணத்தினைக் கணிப்பதற்கான முறைமை அனைத்துப் பங்கேற்கும் வங்கிகளுக்கும் வெளிப்படையானதாக இருத்தல் வேண்டும்.

ஆ) புள்ளியிடல்/ கட்டுப்பணங்களை வகைப்படுத்தல் கணிசமானளவிற்கு வேறுபடுத்தப்பட்டனவாக இருத்தல்.

இ) தனிப்பட்ட வங்கிகளுடன் தொடர்பான முறைமைகளிலிருந்து தோன்றுகின்ற தரமிடல் மற்றும் தரவரிசை என்பனவற்றை இரகசியமாக வைத்திருத்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட மையக் கோட்பாடு இல.9 மற்றும் வைப்புக் காப்புறுதியாளர்களின் பன்னாட்டுச் சங்கம், வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழு என்பனவற்றினால் வழங்கப்பட்ட இன்றியமையாத பிரமாணம் என்பனவற்றிற்கு மேலதிகமாக, வைப்புக் காப்புறுதியாளர்களின் பன்னாட்டுச் சங்கமும் வேறுபட்ட கட்டுப்பண முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான பொது வழிகாட்டல்களை விடுத்திருக்கிறது (2011). அத்தகைய பொது வழிகாட்டல்களின் நியதிகளில், இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட/ வேறுபட்ட கட்டண முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது பின்வருவனவற்றைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

- வேறுபட்ட கட்டுப்பண முறைமைகளை அறிமுகப்படுத்துவதன் முக்கிய குறிக்கோள் மிகையான இடர்நேர்வுகளை எடுப்பதனைத் தவிர்ப்பதற்கும் கட்டுப்பணங்களைக் கணிக்கும் முறையில் கூடுதலானளவிற்கு நியாயமான தன்மைகளை அறிமுகப்படுத்துவதற்குமாக வங்கிகள்/ உறுப்பினர் நிறுவனங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதாக இருத்தல் வேண்டும்.
- வேறுபட்ட கட்டுப்பண முறைமையினை நிறுவுவதற்கு முன்னதாக பொருளாதாரத்தின் நிலை, நடைமுறையிலுள்ள கண்காணிப்பு மற்றும் இறைக் கொள்கைகள், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் முறைமைகளின் நிலை மற்றும் அமைப்பு, பொதுமக்களின் மனோபாவம் மற்றும் எதிர்பார்ப்புக்கள், முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை, சட்ட ரீதியான கட்டமைப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்த கணக்கீடு மற்றும் வெளிப்படுத்துகை அமைப்பு என்பன தொடர்பான சுயமதிப்பீடு முக்கியமானதாகும்.
- இடர்நேர்வுகளை வேறுபடுத்தவும் கட்டுப்பணங்களை ஒப்படைக்கவும் பயன்படுத்தப்படும் அணுகுமுறைகள் காத்திரமானவையாகவும் பரந்தளவான வேறுபட்ட தகவல்களைப் பயன்படுத்துவனவாகவும் முன்னோக்கி நகர்வனவாகவும் வங்கித்தொழில்/ நிதியியல் முறைமை பங்கேற்பாளர்களினாலும் பாதுகாப்பு வலையமைப்பு பங்கேற்பாளர்களினாலும் நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டனவாகவும் இருத்தல் வேண்டும்.
- வைப்புக் காப்புறுதி அதிகாரிகள், அத்தகைய முறைமைகளைப் பின்பற்றுவதற்கும் கிடைக்கத்தக்க மூலவளங்களினதும் தகவல்களினதும் நிலையான, துல்லியமான தன்மையினை ஆராய்ந்து உறுதிப்படுத்தக்கூடிய விதத்திலும் தேவையான அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- மாற்றமடைந்து வருகின்ற பிரச்சனைகளைச் சரியான முறையில் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.
- வேறுபட்ட கட்டுப்பண முறைமைகளில் பயன்படுத்தப்படும் தளங்களும் பிரமாணங்களும் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் ஒளிவுமறைவற்றனவாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய முறைமையின் வடிவமைப்பாளர்கள் விருப்பத்திற்கும் ஊக்குவிப்பிற்குமிடையே சமநிலையான பொறுப்புக்கூறும் தன்மை, ஒழுக்கவியல் மற்றும் வெளிப்படுத்துகை மூலமான ஆற்றல்வாய்ந்த முகாமைத்துவம் என்பனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் தகவல்களின் இரகசியத்தன்மையினை உறுதிப்படுத்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
- வேறுபட்ட கட்டுப்பண முறைமை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு, இற்றைப்படுத்தப்பட்டு மெருகூட்டப்படுதலும் வேண்டும்.

4) இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட வேறுபட்ட கட்டுப்பண முறைமைகளை நிறுவுவதற்கான அணுகுமுறைகள்

இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட வேறுபட்ட கட்டுப்பண முறைமைகளை நிறுவுவதற்குப் பொதுவாக அநேக அணுகுமுறைகள் கிடைக்கத்தக்கனவாகவுள்ளன. அத்தகைய அணுகுமுறைகளில் மூன்று அணுகுமுறைகள் கீழே தரப்படுகின்றன.

அ) கணியம்சார் பிரமாண அணுகுமுறைகள்

இவ்வணுகுமுறைகள், கட்டுப்பணங்களின் மதிப்பீடுகளுக்காக உறுப்பினர் நிறுவனங்களை வகைப்படுத்துவதற்காக உண்மையான மற்றும் பெறப்பட்ட அளவு முறைகளைப் பயன்படுத்த முயல்கின்றன. சில தரம்சார் பிரமாண அணுகுமுறைகள் இடர்நேர்வினை மதிப்பிடுவதற்கு ஒரேயொரு காரணியில் மட்டும் தங்கியிருக்கின்ற வேளையில், மற்றையவைகள் பல்வேறு காரணிகளை இணைப்பனவாகக் காணப்படுகின்றன. பொதுவாக, கணியம்சார் அணுகுமுறைப் பிரமாணங்களுக்கான தகவல் தலத்திலும், தலத்திற்கு வெளியேயும் மேற்பார்வை செயன்முறைகளூடாகச் சேகரிக்கப்படுகின்றன. இவ்வணுகுமுறைக்காக மூலதனப் போதுமை, வருவாய்கள், சொத்துக்களின் தரம் போன்றன சேகரிக்கப்படுகின்றன. மற்றொரு கணியம்சார் முறை யாதெனில் எதிர்பார்க்கப்படும் இழப்பு விலையிடல் மாதிரியாகும். இம்மாதிரியானது உறுப்பினர் நிறுவனங்கள் முறிவடைந்துவிடக்கூடிய சாத்தியம், வைப்புக் காப்புறுதியாளர்கள் உறுப்பினர் நிறுவனங்களுக்கான வெளிப்படுத்துகை மற்றும் வைப்புக் காப்புறுதியாளர்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பின் அளவு என்பனவற்றைப் பரிசீலனையில் கொள்ளுகிறது. கணியம்சார் பிரமாண அணுகுமுறையின் முக்கியமான குறைபாடு யாதெனில் இதன் காத்திரமான தன்மை தரம், நம்பகத்தன்மை, சரியான நேரம் மற்றும் போதுமான வரலாற்று ரீதியான தரவுகள் என்பன மீது அதிகளவிற்குத் தங்கியிருப்பதேயாகும்.

ஆ) தரம்சார் பிரமாண அணுகுமுறை

இவ்வணுகுமுறைகள் பொதுவாக, கட்டுப்பண மதிப்பீட்டு நோக்கங்களுக்காக உறுப்பினர் நிறுவனங்களை வேறுபட்ட வகைகளாக வகைப்படுத்துவதற்கான அநேக தரம்சார் காரணிகளின் மீது தங்கியிருக்கின்றன. பயன்படுத்தப்பட்ட அடிப்படை மாதிரி யாதெனில் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையின் ஒரு சில வடிவங்களில் அல்லது தரமிடல் முறைமை மற்றும் வழிகாட்டல்கள், நியமங்கள், மேற்பார்வை அல்லது வைப்புக் காப்புறுதித் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகின்றமை மீதான தகவல்களில் தங்கியிருப்பதாகும். இம்மதிப்பீடுகள் வழமையாக, உறுப்பினர் நிறுவனங்களின் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை எடுத்துக்காட்டுவனவாகவுள்ளன. இம்முறையின் கீழ்

அட்டவணை 01 : மேற்கு நாடுகளின் கட்டுப்பண மதிப்பீடுகள்

நாடு	ஐ.அமெரிக்கா	கனடா	ஆர்ஜன்ரீனா	பெல்ஜியம்	டென்மார்க்	ஈகுவடோர்	அயர்லாந்து	நோர்வே	பேரு	ரஷ்ய கூட்டமைப்பு	ஐ. இராச்சியம்	பிரான்ஸ்	ஜேர்மனி	கிரேக்கம்	இத்தாலி	போர்த்துக்கல்
ஒரே வீதம்																
வேறுபட்ட வீதம்	x	x		x	x	x	x	x	x	x	x	x	x	x	x	
இணைந்தவை			x													x

மூலம்: வைப்புக் காப்புறுதியாளர்களுக்கான பன்னாட்டுச் சங்கத்தின் 2019ஆம் ஆண்டிற்கான வருடாந்த அளவீடு (2018 இறுதியிலுள்ளவாறு).

அட்டவணை 02 : ஆசியா நாடுகளின் கட்டுப்பண மதிப்பீடுகள்

நாடு	யப்பான்	கொரியா	கென்யா	கொங்கொங்	பிலிப்பைன்ஸ்	சிங்கப்பூர்	மலேசியா	தாய்லாந்து	வியட்நாம்	சீன தாய்பேய்	இந்தோனேசியா	இந்தியா	பாகிஸ்தான்	வங்காளதேசம்	இலங்கை
ஒரே வீதம்	x		x [1]		x			x	x		x	x	x		
வேறுபட்ட வீதம்		x		x		x	x							x	
இணைந்தவை										x					x

1 2020 இலிருந்து வேறுபட்ட கட்டண வீதம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மூலம்: வைப்புக் காப்புறுதியாளர்களுக்கான பன்னாட்டுச் சங்கத்தின் 2019ஆம் ஆண்டிற்கான வருடாந்த அளவீடு (2018 இறுதியிலுள்ளவாறு).

நிறைவேற்றுத் தரம் சார்ந்த காரணிகளைத் தீர்மானிப்பதற்கு உயர்மட்ட கருத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. எனவே, அவை குறைந்த வெளிப்படைத்தன்மைக்கு வழிவகுத்தன.

இ) கணியம்சார் மற்றும் தரம்சார் பிரமாணங்களின் இணைந்த அணுகுமுறை

கட்டுப்பணங்களின் மதிப்பீடுகளுக்காக உறுப்பினர் நிறுவனங்களை வகைப்படுத்துவதற்காக இவ்வணுகுமுறைகள் தரம்சார் மற்றும் கணியம்சார் அளவுமுறைகள் இரண்டினையும் பயன்படுத்துகின்றன. இவ்வணுகுமுறையினை, வேறுபட்ட நியாயாதிக்கங்களில் பரந்தளவிற்குப் பிரயோகிக்கப்படுகின்ற ஒரு முறையாகக் காணமுடியும்.

5) ஏனைய நியாயாதிக்கங்களினால் பிரயோகிக்கப்படும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட/ வேறுபட்ட கட்டுப்பண முறைமைகள்

2019இன் வைப்புக் காப்புறுதியாளர்களின் பன்னாட்டுச் சங்கத்தின் ஆண்டு அளவீட்டுத் தரவின் நியதிகளில், மேற்கு நாடுகளிலும் ஆசியாவிலும் வைப்புக் காப்புறுதி முறைமையின் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட/ வேறுபட்ட கட்டுப்பண வீதங்களின் பிரயோகங்களைப் மேலேயுள்ள அட்டவணைகளில் அவதானிக்கலாம். இதன்படி, உலகின் மேற்குப் பிராந்தியத்திலுள்ள வைப்புக் காப்புறுதி முறைமையில் பெரும்பாலானவை இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட/

அட்டவணை 03 : பிரமாணங்கள் மற்றும் புள்ளிகளின் தொகுப்பு

பிரமாணம்	உயர்ந்தபட்சப் புள்ளி
கணியம்சார் பிரமாணம்	**60**
மூலதனப் போதுமை	**20**
இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதம்	10
மைய மூலதன விகிதம்	10
இலாபத்தன்மை	**1 5**
இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்து விகிதம் மீதான வருவாய்	8
சீராக்கப்பட்ட வருமான தளம்பல் சராசரி	7
சொத்தின் தரம்	**15**
மூலதனத் தள விகிதத்திற்கான தேறிய பழுதுறும் கடன்கள்	8
மொத்தப் மதிப்பிழந்த கடன்களின் விகிதம்	7
சொத்துக்களின் திரட்சி	**5**
மொத்தத் துறை சொத்து திரட்சி விகிதம் மற்றும் வதிவிடச் சொத்துக்கள் திரட்சி விகிதம்	
சொத்து வளர்ச்சி	**5**
மொத்தச் சொத்து விகிதத்திற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் மொத்த சொத்து வளர்ச்சி விகிதம்	
தரம்சார் பிரமாணம்	**40**
மேற்பார்வைத் தரமிடல்	35
ஏனைய தகவல்கள்	5
மொத்தம்	**100**

அட்டவணை 04 : புள்ளிகள் மற்றும் கட்டுப்பண வகைகள்

புள்ளிகள்	கட்டுப்பண வகை
≥ 85	1
≥ 65 இலிருந்து < 85 வரை	2
≥ 50 இலிருந்து < 65 வரை	3
< 50	4

மூலம்: வேறுபட்ட கட்டுப்பண முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான வைப்புக் காப்புறுதியாளர் பன்னாட்டுச் சங்கத்தின் பொதுவான வழிகாட்டல் (2011), பக்கம் 53 -54.

வேறுபட்ட கட்டுப்பண முறைமையினைப் பின்பற்றிய வேளையில் ஆசிய நாடுகளில் இது கலப்பான தன்மையினைக் கொண்டிருந்தது. மலேசியா, கொரியா, ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் வேறுபட்ட கட்டுப்பண முறையினைப் பிரயோகிக்கின்ற வேளையில் இந்தியா, யப்பான், வியட்நாம், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற மற்றைய நாடுகள் ஒரே வீதக் கட்டுப்பண முறைமையினைத் தற்பொழுது பிரயோகிக்கின்றன.

வேறுபட்ட நியாயாதிக்கங்களிலுள்ள வைப்புக் காப்புறுதி முறைமைகளினால் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட/ வேறுபட்ட கட்டுப்பண மதிப்பீடுகளுக்காக பிரயோகிக்கப்படுகின்ற முறையியல்கள்

சில நாடுகள் வேறுபட்ட கட்டுப்பண மதிப்பீட்டு முறைமைகளைப் பின்பற்றி வருவதுடன் அவற்றின் முறையியல்கள்/ அணுகுமுறைகள் கீழே காட்டப்பட்டவாறு ஒன்றுக்கொன்று வேறுபட்டனவாகக் காணப்படுகின்றன.

1. மலேசியா

வேறுபட்ட கட்டுப்பண முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான வைப்புக் காப்புறுதியாளர்களின் பன்னாட்டு அமைப்பின் பொதுவான வழிகாட்டல்களின் நியதிகளில் (2011) மலேசியாவிலுள்ள வைப்புக் காப்புறுதி முறைமை வேறுபட்ட கட்டுப்பண மதிப்பீட்டு முறைமையினைப் பிரயோகிப்பதுடன் அணுகுமுறையானது கணியம்சார் மற்றும் தரம்சார் பிரமாணங்கள் இணைந்ததாகக் காணப்படுகிறது. இதன்படி, 100 சதவீதப் புள்ளிகளிலிருந்து கணியசம்சார் மற்றும் தரம்சார் பிரமாணங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். மேலும் பெறப்பட்ட மொத்தப் புள்ளியின் அடிப்படையில் உறுப்பினர் நிறுவனங்கள் நான்கு வேறுபட்ட வகைகளின் கீழ் வகைப்படுத்தப்படுவதுடன் வகையினைப் பொறுத்து வேறுபட்ட கட்டுப்பண வீதங்கள் பிரயோகிக்கப்படும். பயன்படுத்தப்பட்ட பிரமாணங்களின் தொகுப்பு, வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் கட்டுப்பண வகைகள் முறையே அட்டவணை இலக்கம் 03 இலும் 04 இலும் தரப்பட்டுள்ளன.

2. நைஜீரியா

ஒரே விதமான கட்டுப்பண முறைமையுடன் ஆரம்பமான நைஜீரியாவின் வைப்புக் காப்புறுதி முறைமையானது படிப்படியாக வேறுபட்ட கட்டுப்பண முறைக்கு நகர்ந்தது. அவர்களின் மொத்த இடர்நேர்வுக் கட்டுப்பணம் தளவீதத்திற்கான கணியம்சார் மற்றும் தரம்சார் அளவுவிதிகளின் மீது தங்கியிருந்தது. கணியம்சார் அளவுவிதிகளின் கீழ் மூலதனப் போதுமை, சொத்துக்களின் தரம் மற்றும் திரவத்தன்மை என்பன பரிசீலனையில் கொள்ளப்பட்டன. கணியம்சார் அளவுவிதிகள் குறைந்தளவான பிடித்துவைத்தல் வீதம், வருமானங்களைத் தாமதமாக வழங்குதல், நிதியியல் பற்றிய பிழையான தகவல்களை வழங்குதல், குறைந்தளவிலான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் பரீட்சகர்களின் விதந்துரைப்புக்களை நடைமுறைக்கிடாமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது (மூலம்: வேறுபட்ட கட்டுப்பண முறைமையினை அபிவிருத்தி செய்வதற்கான வைப்புக் காப்புறுதியாளர்களின் பொதுவான வழிகாட்டல் (2011) பக்கம் 58 மற்றும் 59).

6) **இலங்கைக்காக இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பண முறைமையினை நடைமுறைப்படுத்தல்**

இலங்கைக்கான வைப்புக் காப்புறுதி முறைமை 2010இல் நிறுவப்பட்டதுடன், ஏற்புடைத்தான சட்ட நியதிகளில் (ஒழுங்குவிதிகள்) கட்டுப்பண மதிப்பீடுகள் ஒரே வீதம் மற்றும் வேறுபட்ட கட்டுப்பண முறைமைகளுடன் இணைந்ததாகத் தொடர்புபட்டிருக்கிறது. இதற்கமைய, அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் அவற்றின் இடர்நேர்வு தோற்றப்பட்டினைக் கருத்திற் கொள்ளாமல் ஆண்டிற்கு 0.15 சதவீதம் கொண்ட ஒரே வீதத்தினை விதிக்கின்றன. உரிமம்பெற்ற வங்கிகளைப் பொறுத்தவரை, மூலதனப் போதுமை விகிதத்தினைப் பொறுத்து இரு வேறுபட்ட கட்டுப்பண வீதங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அதாவது மூலதனப் போதுமை விகிதம் ≥ 14 சதவீதமாக இருப்பின் ஏற்புடைத்தான கட்டுப்பண விகிதம் ஆண்டிற்கு 0.1 சதவீதமாக இருக்குமென்பதுடன் மூலதனப் போதுமை விகிதம் ≤ 14 சதவீதமாக இருப்பின் ஏற்புடைத்தான கட்டுப்பண விகிதம் ஆண்டிற்கு 0.125 சதவீதமாக இருக்கும்.

எது எப்படியெனினும், இலங்கை வங்கிகளைப் பொறுத்தவரையில் கணியம்சார் தனியான பிரமாணத்தினை மாத்திரம் காணமுடிகிறது. அதாவது மூலதனப் போதுமை அந்தஸ்து இடர்நேர்வு மதிப்பீடுகளுக்காகப் பரிசீலனையில் கொள்ளப்பட்டிருப்பதுடன் இது வங்கியின் முழு இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினையும் பிரதிபலிக்காது. ஆகவே, வங்கியின் தொகையான இடர்நேர்வினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சொத்துக்களின் தரம், திரவத்தன்மை மற்றும் வருவாய்கள் போன்ற கூடுதலான கணியம்சார் காரணிகளைப் பரிசீலனையில் கொள்வது பொருத்தமானதாக இருக்கும். மேலும், கணியம்சார் மற்றும் தரம்சார் பிரமாண அணுகுமுறைகளை இணைப்பது வங்கியின் மிகச் சிறந்த இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினைப் பிரதிபலிக்கும்.

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளைப் பொறுத்தவரையில், இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினைப் பிரதிபலிப்பதற்கான வேறுபட்ட கட்டண முறைமை மிகப் பொருத்தமானதாக இருக்கும். எனினும், வேறுபாடுகள் மேற்பார்வை மட்டங்களின் நியதிகள் மற்றும் வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் வியாபார மாதிரி என்பனவற்றை பரிசீலனையில் கொள்கையில் வேறுபட்ட கட்டுப்பண வீதங்களைத் தீர்மானிப்பதற்காக இதையொத்த புள்ளியிடல் வகைகளுடனான இதுபோன்ற அளவு விதிகளை இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் அனைத்து உறுப்பினர் நிறுவனங்களுக்கும் பிரயோகிக்க முடியாது.

நைஜீரியாவின் வைப்புக் காப்புறுதி முறைமையினால் பிரயோகிக்கப்படும் முறை பிரிவு 5இல் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் கீழ், தற்போதுள்ள கட்டுப்பண வீதங்களை, வேறுபட்ட இடர்நேர்வு அளவு வீதங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், மேலதிக வீதமாக இலங்கை வைப்புக் காப்புறுதி முறைமைக்காகப் பரிசீலனையில் கொள்ள முடியும்.

எனினும், பிரிவு 3இன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் வழிகாட்டல் கோட்பாடுகள், தகவல்களின் கிடைக்கும் தன்மை மற்றும் தரம், அத்தகைய தகவல்களின் இரகசியத்தன்மை, அத்தகைய

வேறுபட்ட கட்டுப்பண முறைமையின் நிருவாக இயலாற்றல் மற்றும் வங்கிகள்/ உறுப்பினர் நிறுவனங்களினால் எடுக்கப்படும் மிகையான இடர்நேர்வுகளைத் தவிர்ப்பதற்காக வங்கிகள்/ உறுப்பினர் நிறுவனங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குகின்ற முதன்மைக் குறிக்கோள் மற்றும் கட்டுப்பணத்தினைக் கணிக்கின்ற முறைமைக்குக் கூடுதலான நியாயபூர்வ தன்மையினை அறிமுகப்படுத்தல் போன்ற காரணிகளைப் பரிசீலனையில் கொள்வதன் மூலம் அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட/ வேறுபட்ட கட்டுப்பண முறைமையினை அதிகரிக்கின்ற விதத்தில் தற்போதுள்ள கட்டுப்பண மதிப்பீட்டு முறைமையினை மேம்படுத்துவதற்கு கணக்கில் கொள்ளப்படுதல் வேண்டும்.

முடிவுரை

நாட்டின் பொருளாதாரத்தின் நிலை, தற்போதைய நாணய மற்றும் இறைக் கொள்கைகள், நிதியியல் முறைமையின் தற்போதைய நிலை மற்றும் அமைப்பு போன்ற குறிப்பிட்ட காரணிகளைக் கணக்கிலெடுப்பதன் மூலம் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட/ வேறுபட்ட கட்டுப்பண முறைமைகளை நிறுவுதல் வேண்டும். மேலும், இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட/ வேறுபட்ட கட்டுப்பண முறைமையின் குறிக்கோள் மிகையான இடர்நேர்வுகளை எடுப்பதனைத் தவிர்ப்பதற்கு வங்கிகளையும் நிதியியல் நிறுவனங்களையும் ஊக்குவிப்பதாகவும் கட்டுப்பண மதிப்பீடுகளுக்கு கூடுதலான நியாய பூர்வத்தன்மையினை வழங்குவதாகவும் இருத்தல் வேண்டும். வேறுபட்ட கட்டுப்பண முறைமைக்காக கணியம்சார் பிரமாண அணுகுமுறைகள், தரம்சார் பிரமாண அணுகுமுறைகள் மற்றும் கணியம்சார் மற்றும் தரம்சார் பிரமாணங்களின் இணைந்த அணுகுமுறைகள் போன்ற வேறுபட்ட அணுகுமுறைகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன. எனினும், இடர்நேர்வுகளை வேறுபடுத்துவதற்கு எந்தவொரு அணுகுமுறையினைப் பயன்படுத்தினும் அவை காத்திரமானவையாகவும் வேறுபட்ட தொடர்பான தகவல்களைப் பயன்படுத்துவனவாகவும் முன்னோக்கிய பார்வையினைக் கொண்டனவாகவும் வங்கிகள் மற்றும் வங்கியல்லாத் தொழில்துறை மற்றும் பாதுகாப்பு வலையமைப்புப் பங்கேற்பாளர்களினால் நன்கு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும். பெரும்பாலான மேற்கு நாடுகள் தற்பொழுது இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பண முறைமையினை பிரயோகிக்கையில் ஆசிய நாடுகள் ஒரே வீதத்தினையும் வேறுபட்ட வீதத்தினையும் பிரயோகிக்கின்றன. நன்கு முகாமைப்படுத்தப்பட்ட நிலைமாறும் தன்மையைக் கொண்ட செய்முறையானது வேறுபட்ட கட்டுப்பண முறைமையின் வெற்றிக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மைக்கும் பங்களிக்க முடியும். அத்தகைய முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துகையில் முறைமையினைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து இற்றைப்படுத்தி மெருகூட்டுதல் வேண்டும்.

முடிவாக, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியத்தின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும் மிகையான இடர்நேர்வினை எடுக்கும் தன்மையினைத் தவிர்ப்பதற்கு ஊக்குவிப்புக்களை வழங்குகின்ற இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பண முறையினை நடைமுறைக்கிடுவதும் கட்டுப்பணச் சேகரிப்பு முறைமையில் கூடுதலான நியாய பூர்வத்தன்மையினைக் கொண்டிருப்பதும் இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் மிகப்பொருத்தமானதாக இருக்கும்.

உசாத்துணை நூல்கள்:

Annual Survey of International Association of Deposit Insurers 2019, www.iadi.org

Demirguc-Kunt, A. and Kane, E.J. (2002), "Deposit Insurance Around the Globe: Where Does It Work", Journal of Economic Perspectives, volume 16, Number 2-spring 2002, Pg.175-195.

IADI Core Principles for Effective Deposit Insurance System (2014), International Association for Deposit Insurers. www.iadi.org

Izaguirre, J.C., Dias, D. and Kerse, M. (2019), "Deposit insurance Treatment of E-Money", CGAP Publications.

Prescott, E.S. (2002), "Can Risk Based Deposit Insurance Premiums Control Moral Hazard?", Federal Reserve Bank of Richmond economic Quarterly, Volume 88/2- Spring 2002

Research and Guidance Committee of International Association of Deposit insurers (2011), "General Guidance for Developing Differential Premium Systems" ,International Association of Deposit Insurers, (2011), www.iadi.org

Research and Guidance Committee of International Association of Deposit Insurers (2012), "Enhanced Guidance for Effective Deposit Insurance Systems", International Association of Deposit Insurers, www.iadi.org

பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கும் நாணயக் கொள்கைக்குமிடையிலான இணைப்பு

உலகளாவிய மற்றும் இலங்கையின் அனுபவம்

லசித ஆர் சி பத்பேரிய
துணைப் பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அறிமுகம்

மோசமான முகாமைத்துவத்துடன் சேர்ந்து பொதுப்படுகடன் உயர்ந்ததொரு மட்டத்தில் குவிந்திருப்பது நாட்டின் பொருளாதார வாய்ப்புக்கள் விரைந்து மோசமடைவதற்கு வழிவகுக்குமாகையால் பொதுப்படுகடனின் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்திற்கான தேவை உலகளாவிய ரீதியில் பரந்தளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பாரம்பரிய ரீதியில், பொதுப்படுகடன், ஒன்றில் அரசாங்கத்தினால் அல்லது மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படுகிறது. நவீன மத்திய வங்கிகளின் முக்கிய வகிபாகம் நாணயக் கொள்கையினை நடத்துவதாக இருப்பதனால் அதாவது தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினைப் பேணும் விதத்தில் வட்டி வீதங்களைப் பொருத்தமானதொரு மட்டத்தில் பேணுவதாக இருக்கின்ற அதேவேளையில் படுகடன் முகாமையாளர்களின் குறிக்கோள் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் படுகடனைத் திரட்டுவதாக இருப்பதனால் பொதுப்படுகடனின் முகாமைத்துவம் மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படலாமா என்பது அக்கறைகளின் முரண்பாட்டினைத் தோற்றுவித்திருக்கிறது. இவ்விரண்டு தனித்துவமான குறிக்கோள்களையும் எய்துவதற்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற உபாயங்கள் ஒரே நேரத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடும். இதற்கமைய, இது தொடர்பான கலந்தாராய்வுகள் பொதுப்படுகடன் முகாமைத்துவம் நாணயக் கொள்கையை மேற்கொள்வதிலிருந்தும் முழுமையாக வேறாக்கப்பட வேண்டுமா என்பது தொடர்பான அடிப்படைக் கேள்விக்கு வழிவகுத்திருக்கிறது. எனினும், ஆய்வுகளின்படி, கொள்கைகளுக்கிடையே பொருத்தமான இணைப்புக்கள் இல்லாமல் அவ்வாறு பிரிப்பது பொருளாதார நிலைமைகள் அரச வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் அளவு, நிறுவனங்களின் பலம் அதேபோன்று நிதியியல் சந்தைகளின் முதிர்ச்சி போன்ற நாட்டின் குறித்துரைக்கப்பட்ட காரணிகளின் அந்தஸ்தினைப் பொறுத்து பொருளாதார நிலைமைகளை மோசமடையச் செய்யலாம். இலங்கையில் அரசாங்கத்தின் இறை முகவராகவும் வங்கியாளராகவும் விளங்கும் மத்திய வங்கியிடம் 1950ஆம் ஆண்டிலிருந்து, நாணய விதிச் சட்டத்தின்படி பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில் நாணயக் கொள்கையினை நடத்துவது இலங்கை மத்திய வங்கியின் மையத் தொழிற்பாடாக இருந்து வருகிறது. இலங்கையில் தற்போதைய படுகடன் மட்டம் இப்பிராந்தியத்திலுள்ள அயல்நாடுகளுடன் ஒப்பிடுகையிலும் அதேபோன்று, ஏற்றுக்கொள்ளத்தக்க விதிகளிலும் கணிசமானளவிற்கு உயர்வாகவே காணப்படுகிறது. எனினும், படுகடன் முகாமைத்துவத்திற்கும் நாணய முகாமைத்துவத்திற்குமிடையில் தற்பொழுது ஆரோக்கியமான இணைப்பே காணப்படுகின்றது. இலங்கையில் படுகடன் முகாமைத்துவத்திற்கான நிறுவன ரீதியான கட்டமைப்பின் தெரிவு கடந்த காலத்தில் கலந்தாராய்வின் கீழ் காணப்பட்டது.

உலகளாவிய ரீதியிலும் அதேபோன்று இலங்கையின் பின்னணியிலும் பொதுப்படுகடனையும் நாணய முகாமைத்துவத்தினையும் இணைப்பது தொடர்பான கலந்தாராய்வில் கவனத்தினைச் செலுத்துவதற்கு இக்கட்டுரை முயற்சிக்கிறது. எஞ்சிய பிரிவுகள் படுகடன் முகாமையாளரின் தொழிற்பாடுகள், நாணயக் கொள்கையினை மேற்கொள்ளுதல், படுகடன் முகாமைத்துவம் மற்றும் நாணயக் கொள்கைகளுக்கிடையிலான முரண்பாடு மற்றும் இணைப்பு, தனியான படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினை நிறுவுதல், இலங்கையரின் அனுபவம் மற்றும் கலந்தாராய்வுகளின் சுருக்கம் என்பனவற்றை விளக்குகிறது.

படுகடன் முகாமையாளரின் தொழிற்பாடுகள் மற்றும் நிறுவன ரீதியான ஏற்பாடுகள்

படுகடன் முகாமைத்துவத்தின் பாரம்பரியமான முக்கிய தொழிற்பாடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்: எதிர்வுகூறல், திட்டமிடுதல், கணக்கீடுகளைச் செய்தல், படுகடனின் முதலாந்தர வழங்கல், படுகடன் தீர்த்தல் கொடுப்பனவுகள், இரண்டாந்தரச் சந்தைகளின் அபிவிருத்தி, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் மற்றும் தகவல்களைப் பரப்புதல் (கல்தேரன் 1997). இத்தொழிற்பாடுகளை வேறுபட்ட நாடுகளில் வேறுபட்ட முகவர்கள் மேற்கொள்கின்றார்கள். பொதுவாக, நிதி அமைச்சு கடன்படுவதற்கும் படுகடன் முகாமைத்துவத்திற்கும் பாராளுமன்றத்திடமிருந்து அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்பான முகவர்களிடையே அப்பணிகளைக் கையளிக்கிறது.

தற்போதைய உலகளாவிய நடைமுறையில் பொதுப்படுகடனின் முகாமைத்துவத்திற்காக மூன்று வகைகளைக் கொண்ட நிறுவன ரீதியான ஏற்பாடுகளை அடையாளம் காணமுடியும். பொதுப்படுகடனை மேற்கொள்வதற்கு மிகப் பொதுவானதும் இயற்கையானதுமான இடம், ஒன்றில் மத்திய வங்கி அல்லது நிதி அமைச்சேயாகும். சில நாடுகளில் நிதி அமைச்சினால் நிறுவப்பட்ட கொள்கைகளையும் அறிவுறுத்தல்களையும் கொண்டு நடத்துகின்ற ஏக முகவராக மத்திய வங்கி விளங்குகின்ற வேளையில் மற்றும் சில நாடுகளில் நிதி அமைச்சு ஒன்றில் வேறுபட்ட திணைக்களங்களுடன் சேர்ந்து அதுவாகவே இப்பணிகளை ஆற்றுகிறது அல்லது இதன் நேரடி மேற்பார்வையின் கீழ் இப்பணிகளை திறைசேரி முகவர்களிடம் கையளிக்கிறது. மாறாக, இன்னும் சில நாடுகளில் படுகடன் முகாமைத்துவம் சாதாரண அளவினை விட மிகக் கூடுதலான சுயாதீனத்துடன் நிறுவனமொன்றிடம் கையளிக்கப்படுகின்றது. இது வழமையாக படுகடன் முகாமைத்துவ அலுவலகம் என அழைக்கப்படுகின்றது. இத்தனித்தனியான முகவர்கள் சாதாரணமாக நிதி அமைச்சிற்கு அறிக்கையளிக்கின்ற வேளையில் அவற்றிற்கு அவற்றின் வழமையான நாளாந்த தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கான சுயாதீனம் வழங்கப்பட்டிருக்கிறது. இச்சுயாதீனமான முகவர்கள் நன்கு குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு வரையறைக்குள் அரசாங்கத்தின் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதுடன் வினைத்திறன்மிக்க திரவத்தன்மை கொண்ட பணம் மற்றும் மூலதனச் சந்தையினை நோக்கி செயலாற்றுகின்றனர் (சுந்தரராஜன், வி, டட்ரல்ஸ் பி மற்றும் புளோமெஸ்ரன், எச். ஜே., 1997)

நாணயக் கொள்கையை மேற்கொள்ளுதல்

நவீன மத்திய வங்கிகளின் பிரதான குறிக்கோள் தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினைப் பேணுவதேயாகும். மத்திய வங்கிகள் அவற்றின் குறிக்கோள்களை எய்துவதற்காக நாணயக் கொள்கையினை மேற்கொள்கின்றன. நாணயக் கொள்கை என்பது பொருளாதாரமொன்றில் பணத்தின் நிரம்பலையும் செலவினையும் மத்திய வங்கி முகாமைப்படுத்துகின்றதொரு செயற்கிரமமாகும். விலை உறுதிப்பாட்டுக் குறிக்கோளினை எய்துவதற்கு மத்திய வங்கி பயன்படுத்துகின்ற முக்கியமான கருவியாக பொருத்தமான மட்டத்திலமைந்த கொள்கை வட்டி வீதங்கள் விளங்குகின்றன. இவற்றின் மூலமாக மத்திய வங்கி சந்தையில் திரவத்தன்மையினை முகாமைப்படுத்துகிறது. விலை உறுதிப்பாட்டு பொறுப்பாண்மையினை வெற்றிகரமாக அடைவதற்கு நாணயக் தீர்மானங்கள் சுயாதீனமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது பரந்தளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கும் நாணய முகாமைத்துவத்திற்குமிடையிலான முரண்பாடு மற்றும் இணைப்பு

படுகடன் முகாமைத்துவத்திற்கும் நாணய முகாமைத்துவத்திற்குமிடையிலான அடிப்படை முரண்பாடு வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதனூடாகவே தோன்றுகிறது (சுந்தரராஜனும் மற்றையவர்களும் 1997) படுகடன் முகாமையாளரின் குறிக்கோள் முன்மதியுடைய இடர்நேர்வு அளவுகளுடன் சாத்தியமானளவிற்கு குறைந்த வட்டி வீதத்தில் படுகடனைத் திரட்டிக் கொள்வதேயாகும். அதேவேளையில் நாணயக் கொள்கை வகுப்போரின் குறிக்கோள் வட்டி வீதங்களில் மாற்றங்களைச் செய்வதன் மூலம் விலை மட்டங்களை உறுதிப்படுத்துவதேயாகும். இக்குறிக்கோள்கள் சில நேரங்களில் அவர்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முடியும். உதாரணமாக, பணவீக்கத்திற்கெதிரான கொள்கையின் ஒரு பகுதியாக வட்டி வீதங்களில் செய்யப்படும் அதிகரிப்பு கடன்பாட்டுச் செலவில் உடனடியாக தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. இது பொதுப்படுகடன் முகாமைத்துவத்தினை எதிர்க்கணியமான முறையில் பாதிக்கிறது. புளோமெஸ்ரெயின் மற்றும் ரேணர் (2012) குறிப்பிடுகின்றவாறு இன்னொரு அக்கறைகளின் முரண்பாடு யாதெனில் மத்திய வங்கியின் வட்டி வீதம் தொடர்பான மேம்பட்ட அறிவு பிணையங்களின் வழங்கல் அட்டவணையினை அவற்றிற்கேற்ப சீராக்கிக் கொள்வதற்கு வங்கியைத் தூண்டக்கூடும்.

முன்மதியுடைய கொள்கை இணைப்புக்கள் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணவும் நிதியியல் சந்தை அபிவிருத்திகளுக்கும் இன்றியமையாததாக இருக்கின்ற அதேவேளையில் சரியான இணைப்பு போதாமல் இருப்பது தனியார் துறையிடையே நிச்சயமற்ற தன்மையினை உருவாக்கி, கடன்பாட்டுச் செலவில் அதிகரிப்புக்களை விளைவிக்கிறது. கொள்கை இணைப்பின் அளவு நிறுவன

ரீதியான கட்டமைப்பிலும் படுகடன் முகாமைத்துவத்தின் தொழிற்பாட்டு ரீதியான ஏற்பாடுகளிலுமே தங்கியிருக்கிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளில், முன்னேற்றம் கண்ட திரவத்தன்மை கொண்ட நிதியியல் சந்தைகளின் காரணமாக, கொள்கை இணைப்பினை வழமையாக சந்தை விசைகளினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும். இது விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் வெளிப்படையான இறைக் கொள்கைக்கும் மற்றும் படுகடன் முகாமைத்துவச் செயன்முறைக்கும் மத்திய வங்கியின் சுயாதீனம் உதவியாக அமைகிறது (சுந்தரராஜனும் மற்றையவர்களும் 1997). எனினும், அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் பொதுவாக, நிதியியல் சந்தைகள் ஆழமற்றனவாகவும் திரவத்தன்மை குறைந்தனவாகவும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை உயர்வானதாகவும் அரசாங்கத்தின் நிதியியல் தேர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டனவாகவும் காணப்படுவதுடன் நாணய, இறை மற்றும் படுகடன் முகாமைத்துவக் கொள்கைகளை நெருக்கமாக இணைப்பது உறுதிப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்திகள் தொடர்பான பொதுவான குறிக்கோள்களுக்கு ஆதரவளிப்பதற்கு இன்றியமையாததாகும் (புளோமெஸ்ரெயின் மற்றும் ரேணர், 2012; புளோமெஸ்ரெயின் மற்றும் துண்கோம், 1997; பிளார்டோ மற்றும் மற்றையவர்கள், 2012) கொள்கை மட்டத்தில், நாணயக் கொள்கை மீதான தாக்கங்களைப் படுகடன் முகாமைத்துவ உபாயங்களைப் பின்பற்றுவதற்கு முன்னதாக பூரணமாக பரீட்சித்துக் கொள்ள வேண்டியுள்ள வேளையில் கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைக்கிடுவதற்கு முன்னதாக தொழிற்பாட்டு மட்டம், திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் முதிர்ச்சியமைப்பு என்பனவற்றைச் சரியான முறையில் பரீட்சித்துக் கொள்வதும் அவசியமாகும். பிரான்செஸ்கோ மற்றும் லியார்னான்டோ (2019) ஆகியோர் பாரிய கடன் இருப்பொன்று காணப்படுகையில் நாணய மற்றும் இறை இணைப்பு போதாமல் இருப்பது பொருளாதார நிலைமைகளின் தீங்கிற்கு வழிவகுக்கலாம் என்பதனைக் கண்டறிந்திருக்கின்றனர்.

தனியான படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினை நிறுவுவதற்கான யோசனை

தனியான படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினை நிறுவுவது தொடர்பில் அநுகூலங்களும் அதேபோன்று பிரதிகூலங்களும் காணப்படுகின்றன. மத்திய வங்கி படுகடன் முகாமைத்துவத்தினைக் கையாள்வதற்கெதிரான முதலாவதும் மிக முக்கியமானதுமாகக் குறிப்பிடப்படுவது யாதெனில் படுகடன் முகாமைத்துவத்தையும் நாணயக் கொள்கையினையும் இணைப்பதனால் தோன்றுகின்ற அக்கறைகளின் முரண்பாடாகும். இது மத்திய வங்கியின் நேர்மையினையும் சுயாதீனத்தினையும் பாதுகாக்கிறது. மேலும், தனியான படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினைக் கொண்டிருப்பதன் மூலம் படுகடன் முகாமைத்துவம் நாணய முகாமைத்துவத்தின் ஒரு பகுதியல்ல என்பதனையும் தெளிவாக்கி விடுகிறது. மேலும், இது நவீன இடர்நேர்வு முகாமைத்துவ உத்திகளில் நிபுணத்துவத்தினைக் கொண்டுள்ள சொத்துப்பட்டியல் முகாமையாளர்களிடம் படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளை ஒப்படைப்பதன் மூலம் படுகடன் முகாமைத்துவத்தினையும் மேம்படுத்துகிறது (வோகேட்ஸ் மற்றும் லான்டு, 1977; சிங், 2013). தனியான படுகடன் அலுவலகமொன்றின் பிரதான குறைபாடு யாதெனில், மூலதனச் சந்தைகள் அபிவிருத்தியடையாதனவாக இருக்குமாயின் இது பிரச்சனைகளை முன்னேற்றுவதிலும் பார்க்க சிக்கலாக்கிவிடும் என்பதாகும். அத்தகைய சூழ்நிலைகளின் கீழ் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் சந்தைப் பொறிமுறைகளின் மூலமாக மாத்திரம் படுகடனைத் திரட்டிக் கொள்வது சவால்மிக்கதாக இருக்கும். இதன்படி, நாணய மற்றும் இறை அதிகாரிகளிடையே சரியான இணைப்புக்கள் இல்லாமல், சுயாதீனமான படுகடன் அலுவலகமொன்றினை நிறுவுவது செலவு மற்றும் இடர்நேர்வுகளின் உத்தமமானதொரு இணைந்த தன்மையில் அரசாங்கத்திற்கான நிதிகளைத் திரட்டிக் கொள்வது இடர்ப்பாடுகளுக்கு வழிவகுக்கின்ற வேளையில் நாணயக் கொள்கையினைக் கொண்டு நடத்துவதிலும் சிக்கல்களைத் தோற்றுவித்துவிடும். கடன்பாடுகளின் அளவு உயர்வாகக் காணப்படுகின்ற அதேவேளையில் சந்தைகள் தளம்பலடைந்து காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடி நிலவும் நேரங்களில் இப்பிரச்சனை தீவிரமடையக்கூடும்.

உலகளாவிய அனுபவம்

1980களின் ஆரம்பத்திலும் 1990 களின் பிற்பகுதியிலும் காணப்பட்ட படுகடன் நெருக்கடிகளைத் தொடர்ந்து, கொள்கை வகுப்போர் பொதுப்படுகடன் முகாமைத்துவத்திலும் நாணயக் கொள்கை வகுப்பிலிருந்து படுகடன் முகாமைத்துவத்தினை வேறாக்குவது தொடர்பான கலந்துரையாடலிலும் விசேட கவனத்தினைச் செலுத்தினர். பெல்ஜியம், அயர்லாந்து மற்றும் போர்த்துக்கல் உள்ளிட்ட ஐரோப்பாவிலுள்ள அநேக நாடுகள் முக்கியமாக படுகடன் தீர்ப்பனவுச் செலவுகளைக் குறைப்பதற்காக படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளை பன்முகப்படுத்தின. அவுஸ்திரேலியா, பின்லாந்து ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பன படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு திறைசேரி முகவர்களை வைத்திருக்கின்றன. இந்நாடுகளில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துவதற்கு மத்திய வங்கியின் அரச பிணையங்களின் தேவைப்பாடுகள் இணைத்தல் குழுவினூடாக நிதி அமைச்சிற்கு அறிவிக்கப்படுகின்றன. சுவீடன் மற்றும் அயர்லாந்து மற்றும் பல நாடுகளில் படுகடன் முகாமைத்துவ அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்நாடுகளில் நிதி அமைச்சு கடன்பாடுகளுக்காகப் பாராளுமன்றத்திடமிருந்து

அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதுடன் படுகடன் அலுவலகத்திற்கான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது. இந்தியாவில் இந்திய மத்திய வங்கியான, இந்திய ஒதுக்கு வங்கியிலிருந்து படுகடன் முகாமைத்துவத்தினை வேறாக்குவது தொடர்பான கலந்தாராய்வுகள் நீண்ட வரலாற்றினைக் கொண்டிருக்கின்றன. தனியான அலுவலகமொன்றினை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்ட பிரேரணைகள் அக்கறைகளின் முரண்பாடுகளுக்குத் தீர்வாக விளங்கி, படுகடன் செலவினைக் குறைத்து, படுகடன் திரட்சிக்கு வசதியளித்து வெளிப்படைத்தன்மையினை அதிகரிக்கும். எனினும், இந்திய ஒதுக்கு வங்கியின் அப்போதைய ஆளுநர் திரு. டி. சுப்பராவ் 2011இல் அத்தகைய அநுகூலங்கள் மிகையாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன எனக் குறிப்பிடுவதுடன் அதேவேளையில் சந்தைக் கடன்பாடுகள் சந்தையின் ஈர்த்துக்கொள்ளும் இயலாற்றலை விஞ்சிக் காணப்படும் மத்திய அரசாங்கத்தின் பற்றாக்குறை நிதியிடலின் முக்கிய மூலமாக சந்தைக் கடன்பாடுகள் காணப்படுவதனை அழுத்திக் குறிப்பிடுகின்றார்.[1] இதன்படி, இந்திய ஒதுக்கு வங்கியிலிருந்து படுகடன் முகாமைத்துவத்தினை வேறுபடுத்துவது மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையிலான இணைப்பினை தளர்வுறச் செய்து கடன்பாடுகளை இடர்ப்பாடானதாக்கிவிடும். எனினும், 2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட உரையில், இந்திய நிதி அமைச்சர், நிதி அமைச்சிற்குள் பொதுப்படுகடன் முகாமைத்துவ முகவராண்மையொன்றினை ஏற்படுத்துவதற்கு முன்மொழிந்திருந்தார். இது இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. தற்பொழுது இந்தியா, பொதுப்படுகடன் முகாமைத்துவ முகவர் என்ற பெயரில் சுயாதீனமானதும் சட்ட ரீதியானதுமான படுகடன் முகாமைத்துவ முகவராண்மையினை ஏற்படுத்துவதற்கு முன்னதாக, இடைக்கால ஏற்பாடொன்றாக, பொருளாதார அலுவல்கள் திணைக்களத்திற்குள் பொதுப்படுகடன் முகாமைத்துவப் பிரிவொன்றினை ஏற்படுத்தியிருக்கிறது. எனினும், செல்லும் வழி பற்றி சந்தைக்கு இன்னமும் தெளிவாக அறிவிக்கப்படவில்லை.

விசேடமாக, உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளை உடனடுத்து புலமையாளர்களும் ஈடுபாடு கொண்ட தரப்பினர்களும் படுகடன் மட்டங்கள் உயர்ந்து வருவதன் காரணமாக, படுகடன் முகாமைத்துவத்தினை, இனிமேலும் வழமையானதொரு தொழிற்பாடாகக் கருதப்படக்கூடாது. இதனை தனியானதொரு படுகடன் அலுவலகத்திடம் கையளிக்க வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தனர். படுகடன் முகாமைத்துவம் இறை மற்றும் நாணய முகாமைத்துவத்துடன் சரியான முறையில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென வாதிடப்படுகிறது (உலக வங்கி 2017). மேலும், நாணயக் கொள்கை நிலையினை உடனடியாகவும் முழுமையாகவும் ஊடுகடத்துவதற்கு சந்தையிலிருந்து சொத்துக்களை வாங்குகின்ற மரபுவழியற்ற நாணயக் கொள்கை உபாயமாக விளங்கும் கணியம்சார் தளர்த்தல்களைப் பரந்தளவில் பயன்படுத்துவது பற்றி குட்கார்ட் (2012) படுகடன் முகாமைத்துவக் கொள்கை நாணயக் கொள்கையுடன் பெருமளவிற்கு ஒன்றிலொன்று தங்கியிருக்கிறது எனக் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் அனுபவம்

இலங்கையில் படுகடன் முகாமைத்துவம், நாணய விதிச் சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி இலங்கை மத்திய வங்கியினால் பரந்தளவில் ஆற்றப்படுகிறது. குறிப்பாக, 1950இல், இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து உள்நாட்டு அரசாங்க படுகடனினதும் வெளிநாட்டு வர்த்தக படுகடனினதும் முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட வேளையில், வெளிநாட்டு சலுகை ரீதியான நிதியிடல் நிதி அமைச்சின் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.[2] பாராளுமன்றம் வருடாந்த ஒட்டுமொத்த கடன்பாட்டு வரையறையினைத் தீர்மானிப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கிறது. இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம் படுகடன் சாதனங்களை வழங்குவதுடன் முகாமைப்படுத்தல், பதிவுசெய்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதுடன் தொடர்பான அனைத்து விடயங்களையும் கையாண்ட வேளையில் ஏனைய வெளிநாட்டுக் கடன்களையும் தீர்ப்பனவு செய்கிறது.[3]

இலங்கையில் உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவ உபாயம் நிதி அமைச்சின் மூத்த அலுவலர்கள் உட்பட, பொதுப்படுகடனின் பணிப்பாளர் (குழுவின் தலைவர்) பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மற்றும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளர்களை உள்ளடக்கியிருக்கிறது. இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், மூத்த முகாமைத்துவத்திற்கு நாணயக்

1 பார்க்க http://www.business-standard.com/article/economy-policy/rbi-against-setting-up-of-separate-debt-management-office-111050900163_1.html

2 எனினும், சலுகை ரீதியான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு இலங்கை மத்திய வங்கியினாலேயே மேற்கொள்ளப்படுகிறது.

3 பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, இலங்கையில், பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் குறிக்கோள் யாதெனில், முன்மதியுடைய இடர்நேர்வு அளவுடன் இசைந்து செல்கின்ற விதத்தில் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் அரசாங்கத்தின் நிதியிடல் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதும் அரச படுகடன் பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்து வலுப்படுத்துகின்ற வேளையில் அதன் வினைத்திறனை உயர்த்துவதும் உறுதிப்பாட்டினைப் பேணுவதேயாகும்.

மத்திய அரசாங்கம் மற்றும் பொதுப்படுகடன் *



வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை



தி-உண்டியல் மற்றும் தி-முறிகளின் மொத்த வழங்கல்கள்



திறைசேரி உண்டியல் வீதங்கள் மற்றும் கொள்கை வட்டி வீதங்கள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

* பொதுப்படுகடன் இருப்புக்கள் மத்திய அரசாங்கப் படுகடன், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்பிற்காக வழங்கப்பட்ட வெளிநின்ற திறைசேரி முறிகள், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்கள், அரச உத்தரவாதப் படுகடன்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் வழங்கப்பட்ட வெளிநின்ற பன்னாட்டு முறிகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

கொள்கை விதந்துரைப்புக்களை வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கின்ற வேளையில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்குப் பொறுப்பாக இருக்கிறது. உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவக் குழு மாதாந்தம் கூடுவதுடன் சந்தை நிலைமைகள், அரச காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகள், முதிர்ச்சித் தோற்றப்பாடு, நாணய அபிவிருத்தி உட்பட படுகடன் தோற்றப்பாட்டிலுள்ள இடர்நேர்வுகள் மற்றும் பணவீக்கம் என்பனவற்றைப் பரிசீலனையில் கொள்வதன் மூலம் பின்பற்றப்படுகிறது. மேலும், உள்நாட்டுப் படுகடன் சாதனங்களின் ஏலப் பெறுபேறுகளைத் தீர்மானிக்கின்ற கிரமமான விலைக்கோரல் சபைகளும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மற்றும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளர்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன.

மேலே கலந்துரையாடப்பட்டவாறு, வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதனூடாக எழுகின்ற அடிப்படை முரண்பாடுகள் இலங்கையின் பின்னணியில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே இருக்கிறது. பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் குறிக்கோள் யாதெனில், முன்மதியுடைய முகாமைத்துவ இடர்நேர்வுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் (வட்டி வீதம்) அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகளை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் நாணய முகாமைத்துவத்தின் குறிக்கோள் தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினைப் பேணுவதேயாகும். தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கம் போன்றவற்றின் அடிப்படையில் மத்திய வங்கியினால் கொள்கை வீதங்கள் நிர்ணயிக்கப்பட்ட வேளையில் நடவடிக்கை பொதுப்படுகடனின் செலவினைத் தீர்மானிக்கிறது.

இலங்கையில் பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கும் நாணய முகாமைத்துவத்திற்குமிடையில் மிக நெருக்கமான இணைப்பு இருத்தல் வேண்டுமென்பதற்கு அநேக காரணங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. இலங்கை கடந்த பல ஆண்டுகளாக உயர்ந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையுடன் தொழிற்படுவது கணிசமான அரச படுகடன் இருப்பினைத் தோற்றுவித்திருக்கிறது. 2000ஆம் ஆண்டிலிருந்து வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை சராசரியாக 7.1 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் அரசாங்கத்தின் தேறிய படுகடன் மொ.உ.உற்பத்தியில் 68 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டது. சந்தைச் சொத்துக்களின் பெறுமதியில் கணிசமானளவு பங்குடன் அரச பிணையங்கள் சந்தை, இலங்கையின் மூலதனச் சந்தையில் ஆதிக்கம் செலுத்தியது. 2019இல் மாத்திரம் அரசாங்கம் மொத்த அடிப்படையில்

மொ.உ.உற்பத்தியில் 16.1 சதவீதம் கொண்ட தொகைக்கு திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் வழங்கியது (மேலேயுள்ள வரைபடத் தொகுதியைப் பார்க்கவும்).

இலங்கையின் மூலதனச் சந்தை அதன் அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஆழமானதாகவோ திரவத்தன்மையினைக் கொண்டதாகவோ இல்லை என்பதுடன் நவீனத்துவமான பெறுதிகள் சந்தையோ வினைத்திறன்மிக்க விலை கண்டறிதல் செயன்முறையோ, மத்திய இணைத்தரப்பு தீர்வகமோ அல்லது நவீனத்துவம் வாய்ந்த இரண்டாந்தரச் சந்தை இலத்திரனியல் வர்த்தகப்படுத்தலோ இல்லை.[4] இலங்கையில் காணப்படும் மூலதனச் சந்தையின் முதிர்ச்சியற்றதன்மை, ஈர்த்துக் கொள்ளக்கூடிய சந்தை இயலாற்றலின் அளவுக்கு மீறிய கடன்பாடுகள் என்பன அரச பிணையங்களுக்கான முதலாந்தரச் சந்தையின் தூண்டுதலாகக் காணப்படுகின்றவிடத்து விலைக்குறிப்பீட்டின் பாரிய வீச்சினை ஏலமொன்றில் அவதானிக்க முடிகின்ற வேளையில் வட்டி வீதங்களின் மிகையான வேறுபாடுகளை அடுத்துவரும் வாராந்த அல்லது மாதாந்த ஏலங்களில் அவதானிக்க முடியும். மேலும், இக்கருதுகோள் கடந்த காலத்தில் அரச பிணையங்களின் மொத்தமான அல்லது பகுதியளவிலான நிராகரிப்பினால் ஆதரவளிக்கப்படுகிறது. மேலும், உலகளாவிய நெருக்கடி நேரத்தில், குறிப்பாக அண்மைய உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளின் போது, அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் நாணயக் கொள்கை வீதங்களிலிருந்து மிகக் கடுமையாக நகர்ந்து சென்றன.

தொகுப்பு

படுகடன் மட்டங்கள் அதிகரித்துச் செல்வதன் காரணமாக பொதுப்படுகடன் முகாமைத்துவம் பரந்தளவிற்கு விவாதத்திற்குரிய விடயமாக மாறியுள்ளது. உலகளாவிய அதேபோன்று உள்நாட்டுப் பின்னணியில் தொடர்பான கலந்துரையாடல்கள், பொதுப்படுகடன் முகாமைத்துவம் நாணயக் கொள்கையினை மேற்கொள்வதிலிருந்தும் முழுமையாக வேறாக்கப்பட வேண்டுமா என்பது பற்றிய அடிப்படைக் கேள்விக்கு வழிவகுத்த வேளையில் நாணய மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவத்துடன் தொடர்பான கொள்கைகளுக்கிடையிலான இணைப்புக்களின் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்துகின்றன. எனினும், ஆய்வின்படி, கொள்கைகளிடையே சரியான இணைப்புக்கள் இல்லாமல் அவ்வாறு வேறாக்கப்படுவது பொருளாதார நிலைமைகள், அரச வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் அளவு, பொதுப்படுகடனின் அளவு, நிறுவனங்களின் பலம் மற்றும் நிதியியல் சந்தைகளின் முதிர்ச்சி போன்ற நாடுகளுக்கே உரித்தான காரணங்களின் நிலையினைப் பொறுத்து பொருளாதார நிலைமைகள் மோசமடையக்கூடும். இலங்கையின் பின்னணியில், இலங்கை மத்திய வங்கி பொதுப்படுகடனின் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக இருக்கிறது. இலங்கை உயர்ந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் கொண்டிருப்பதுடன் உயர்ந்த படுகடன் இருப்புக்களைப் பேணுவதுடன் அபிவிருத்தியடையாத மூலதனச் சந்தைகளையும் கொண்டிருக்கிறது. இத்தகைய பின்னிணியில், படுகடன் முகாமைத்துவத்திற்கும் நாணயக் கொள்கைக்குமிடையிலான தளர்வான இணைப்பு இரண்டு கொள்கைகளையும் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தீங்குபயக்கலாம். எனவே, நாணய மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கிடையே வலுவான இணைப்பு தொடர்ந்தும் காணப்பட்டாலும் கூட, பொதுப்படுகடனின் முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து வேறாக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும். வேறாக்கும் விடயத்தினைப் பொறுத்தவரையில் நாடு போதுமானளவு ஆழமும் திரவத்தன்மையும் கொண்ட நிதியியல் சந்தை முதிர்ச்சியடையும் வரையிலும் அரசாங்கம் சரியான இறைத்திரட்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பின்பற்றும் வரையிலும் படுகடன் முகாமைத்துவக் கொள்கைகளை வடிவமைப்பதற்கும் அதேபோன்று தொழிற்பாட்டு மட்டத்திலான தீர்மானங்களை நெறிப்படுத்துவதற்குமாக இலங்கை மத்திய வங்கியிலிருந்தும் நிதி அமைச்சிலுமிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்கிய உயர்மட்டக் குழுவினை நிறுவக்கூடியதாக இருக்கும்.

உசாத்துணை நூல்கள்

Blommestein, J.F and Thunholm, E.C. (1997), Institutional and Operational Arrangements for Coordinating Monetary, Fiscal, and Public Debt Management in OECD Countries in Coordinating Public Debt and Monetary Management, IMF Publications

Blommestein, H. J. and P. Turner (2012), "Interactions Between Sovereign Debt Management and Monetary Policy Under Fiscal Dominance and Financial Instability", OECD Working Papers on Sovereign Borrowing and Public Debt Management, No. 3

Francesco B and Leonardo M (2019) The dire effects of the lack of monetary and fiscal coordination, Journal of Monetary Economics 104 (2019) 1–22

Goodhart C. (2012) Monetary policy and public debt in Public Debt, Financial Stability Review No 16, Banque de France

Filardo A, Mohanty M and Moreno R (2012) Central bank and government debt management: issues for monetary policy BIS Papers in: Bank for International Settlements (ed.), Fiscal policy, public debt and monetary policy in emerging market economies, volume 67, pages 51-71, Bank for International Settlements

IMF (2003), Guidelines for Public Debt Management – Amended, Prepared by the Staffs of the International Monetary Fund and the World Bank

Kalderen, L (1997), Debt management functions and their Locations, in Coordinating Public Debt and Monetary Management, IMF Publications

Sundararajan, V, Dattels, P and Blommestein, H. J. (1997), Coordinating Public Debt and Monetary Management in Transition Economies, Issues and Strategies, in Coordinating Public Debt and Monetary Management, IMF Publications

The World Bank (2017) Government Debt Management: Designing Debt Management Strategies, World Bank Treasury

4 இலங்கை மத்திய வங்கி, அரச பிணையங்கள் சந்தைக்காக இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தண்டத்தினையும் மத்திய இணைத்தரப்பு தீர்வகத்தையும் நிறுவுவதற்கான செயன்முறையில் இலங்கை மத்திய வங்கி ஈடுபட்டிருக்கிறது.

மத்திய வங்கிகளில்
இடர்நேர்வு முகாமைத்துவம்

எம் கே ஜயவர்த்தன
துணைப் பணிப்பாளர்
தொடர்பூட்டல் திணைக்களம்

கொள்கை வகுப்போர் குறிப்பிடுகின்றவாறு, மத்திய வங்கிகள் பொதுமக்கள் ஈடுபாடு கொண்ட பணியான விலை உறுதிப்பாட்டினையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினையும் வழங்குகின்ற பணியில் ஈடுபட்டு வருகிறது. பொதுக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் பணி வழங்குவோர் என்ற ரீதியில் மத்திய வங்கிகள், உறுதிப்பாட்டில் கவனம் செலுத்துகின்ற வினைத்திறன்மிக்க நன்கு முகாமைப்படுத்தப்பட்டு வரும் நிறுவனங்கள் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இப்பன்முகப்படுத்தப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுகின்ற செயன்முறையின் போது மத்திய வங்கிகள் பரந்தளவிலான இடர்நேர்வுகளுக்குள்ளாகின்றன. மத்திய வங்கிகளின் முக்கியமான பொறுப்புக்களைக் கவனத்தில் கொள்கையில், அவர்கள் அனைத்து சாத்தியமான இடர்நேர்வுகளையும் அவர்களது உள்ளார்ந்த வளங்களையும் அடையாளம் காண்பதற்கும் இத்தகவல்களைச் சேகரிப்பதற்கான ஒரு மையத்தினை நிறுவுவதற்கும் அனைத்து இடர்நேர்வுகளையும் முறையியல் சார்ந்த விதத்தில் கட்டுப்படுத்திக் கொள்ளவும் முயற்சிக்க வேண்டும்.

மத்திய வங்கியொன்றின் இடர்நேர்வு வெளிப்படுத்துகை

மத்திய வங்கியொன்றின் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை உபாய, நிதியியல் மற்றும் தொழிற்பாடு சார்ந்தவை எனப் பரந்தளவில் வகைப்படுத்திக் கொள்ளமுடியும். காரணிகளுடன் தொடர்பான உபாய இடர்நேர்வுகள், மத்திய வங்கி அதன் பணிகளை நிறைவேற்றுவதிலிருந்தும் அதாவது அதன் உபாயத் திட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள (நாணக் கொள்கை, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கொள்கைகள், முகவர் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்பூட்டல்கள் போன்றவை) குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வதனைத் தடைசெய்கின்றன. நிதியியல் இடர்நேர்வுகள் முதலீட்டுத் தீர்மானத்தினை மேற்கொள்வதிலிருந்து தோன்றுகின்ற கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு (பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் அரச ஓய்வூதிய நிதியம் என்பனவற்றின் முகாமைத்துவம்) போன்றவற்றை உள்ளடக்குகின்றன. தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் என்பது நேரடியான அல்லது மறைமுகமான நிதியியல் இழப்புக்களை அல்லது போதுமானதற்ற உள்ளகச் செய்முறைகள், மக்கள் மற்றும் முறைமைகள் அல்லது வெளிவாரி சம்பவங்களிலிருந்து தோன்றுகின்ற புகழினைச் சேதப்படுத்துகின்ற விடயங்களைக் குறிக்கிறது. இவ்விடர்நேர்வுகள் எவற்றினதும் பொருண்மியப்படுத்துகை மத்திய வங்கியின் ஐந்தொகை மீதும் புகழின் மீதும் கடுமையான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். எனவே, இடர்நேர்வு முகாமைத்துவம் என்பது "இடர்நேர்வு தொடர்பில் நிறுவனமொன்றினை நெறிப்படுத்தி, கட்டுப்படுத்துகின்ற இணைக்கப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு" எனப்படுவதுடன் மத்திய வங்கியொன்றின் நாளாந்த நடவடிக்கைகளின் இன்றியமையாத பகுதியொன்றினை உள்ளடக்குகின்றது.

மத்திய வங்கிகளுக்கான முறையியல் சார்ந்த இடர்நேர்வு முகாமைத்துவம்

அனைத்து நிறுவனங்களும் அவற்றின் நாளாந்த நடவடிக்கைகளின் முகாமைத்துவத்தில் பல நிச்சயமற்ற தன்மைகளையும் சவால்களையும் எதிர்நோக்கி வருகின்றன. நிச்சயமற்ற தன்மையானது, இடர்நேர்வு மற்றும் வாய்ப்பு இரண்டினதும் தன்மையினைக் கொண்டிருப்பதன் மூலம் நிறுவனத்தின் மதிப்பினைக் குறைத்து விடுகிறது அல்லது உயர்த்தி விடுகிறது. வழமையாக, பெரும்பாலான மத்திய வங்கிகளில் இடர்நேர்வு முகாமைத்துவம் பன்முகப்படுத்தப்பட்ட தொழிற்பாடுகளாகக் காணப்படுவதுடன் திணைக்களங்களும் பிரிவுகளும் அவற்றின் சொந்த இடர்நேர்வுகளை மதிப்பிட்டுக் கொள்வதற்கான பொறுப்புக்களையும் கையேற்றிருக்கின்றன. பிரிவுகளில் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவது, இடர்நேர்வுத் தணிப்பு முயற்சிகள் இரட்டிப்பாவது, இடர்நேர்வுகளின் பகுப்பாய்வில் ஏற்படக்கூடிய இடைவெளிகள், அதிகளவான முக்கியமான இடர்நேர்வுகளைப் போதுமானளவிற்குச் செயன்முறைப்படுத்த முடியாமை, நிறுவனம் முழுவதற்கும் இடர்நேர்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளாமை போன்றன உள்ளிட்ட பிரச்சனைகள் அதிகளவாகி விடுவதற்கு காரணமாகி விடுகிறது. நிறுவனமொன்றின் வெற்றிக்கு முக்கிய காரணியாக அமைவது தொடர்புபட்ட பல்வேறுபட்ட இடர்நேர்வுகளையும் புரிந்துகொள்வதும் சரியான நேரத்தில் அவற்றைக் கட்டுப்படுத்திக் கொள்வதுமேயாகும். இந்நிச்சயமற்ற தன்மைகளையும் அவற்றுடன் இணைந்த இடர்நேர்வுகளையும் வாய்ப்புக்களையும் காத்திரமான முறையில் கையாள்வதற்கு முறையியல் சார்ந்த அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மத்திய வங்கிகள் அவற்றின் இயலாற்றலை உயர்த்திக் கொள்ளவும், காலப்போக்கில் அவற்றின் பெறுமானத்தினை அதிகரித்துக் கொள்ளவும் உதவும். எனவே, மத்திய வங்கியின் நிகழ்ச்சிநிரலிலும் தீர்மானங்களை மேற்கொள்கின்ற செயன்முறைகளிலும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினைக் கூட்டிணைத்துக் கொள்வதற்காக மத்திய வங்கிகள் தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையினை அதிகளவிற்குப் பின்பற்றி வருகின்றன.

மத்திய வங்கிகளுக்கான தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவம்

தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையானது நிறுவனமொன்றில் முழுமையாகவுள்ள சாத்தியமான இடர்நேர்வுகளை அவற்றின் சாத்தியமான தாக்கங்களைக் குறைக்கும் விதத்திலான அடையாளம் காணுதலைக் கண்காணித்தல் மற்றும் முகாமைப்படுத்தல் என்பனவற்றிற்கான முறையியல் சார்ந்த அணுகுமுறைகளை உள்ளடக்கியிருக்கிறது. இச்செயன்முறையானது, நிறுவனமொன்று தொழிற்படுகின்ற சூழ்நிலையின் பின்னணி, பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் உள்ளகக் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கிடப்பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்தும் விதத்தில் அதன் உபாயக் குறிக்கோள்கள், வியாபார உபாயங்கள், இடர்நேர்வுக் கலாச்சாரம், இடர்நேர்வினைத் தாங்கிக்கொள்ளும் இயலாற்றல் போன்றவற்றினைப் பரிசீலனையில் கொள்கிறது. "முழு நிலைமைகளையும் ஆராயும்" பொருட்டு வேறுபட்ட இடர்நேர்வு வகைகளை ஒருங்கிணைக்கின்ற தேவையினையும் அவற்றை ஒன்றாக மதிப்பிடப்படுவதற்கான தேவையினையும் அங்கீகரிக்கின்ற விதத்தில், தொழில்முயற்சியை அடிப்படையாகக் கொண்ட இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறையிலிருந்து விலகி வரைவிலக்கணம் செய்யப்பட்ட வழிப்படுத்தலொன்றினூடாக அனைத்து இடர்நேர்வுகளும் அறிக்கையிடப்படுகின்றதொரு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும். தொழில்முயற்சியை அடிப்படையாகக் கொண்ட இடர்நேர்வு முகாமைத்துவமானது நிறுவனம் முழுவதையும் அடையாளம் காணுதல், மதிப்பிடப்பட்ட மற்றும் இடர்நேர்வுகளை நிலையானதொரு அடிப்படையில் கையாளுதல் என்பனவற்றிற்காக முறையியலை நிறுவுதல் மற்றும் ஆவணமயப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு ஆதரவளித்தல் என்பனவற்றைப் பரிசீலனையில் கொள்கிறது. தொழில்முயற்சி அடிப்படையிலான முகாமைத்துவச் செயன்முறையும் கொள்கைகள், நடவடிக்கை முறைகள், முறைமைகள் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்ட அதிகாரக்கையளிப்பினைத் தெளிவாக விளக்குகின்ற அடுக்குமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்பொன்றினூடாகத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான ஒழுக்கவியல் புகுத்தப்படுவதுடன், இது அனைத்து மட்டங்களிலுமுள்ள மக்களினாலும் இடர்நேர்வினை ஏற்றுக்கொள்வதற்கான இசைவினை உறுதிப்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்படுகிறது. தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவம் மேற்பார்வையினையும் கட்டுப்பாட்டினையும் நிறுவுவதனூடாக இடர்நேர்வுகளின் காத்திரமான முகாமைத்துவத்திற்கு உதவுகின்றதுடன் இடர்நேர்வு முகாமைத்துவம்/ இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்புக்களை நிறுவுவதனூடாக இடர்நேர்வுக் கோட்பாடுகளையும் கலாச்சாரத்தினையும் வடிவமைப்பதற்கும் முயற்சிக்கிறது. இவ்வழியில் தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் வங்கியின் நீண்ட கால ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் புகழையும் பாதுகாப்பதற்காக வங்கி முறைமையிலுள்ள உருவச் சொத்துக்களையும் அருவச் சொத்துக்களையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் முயற்சிக்கும்.

இடர்நேர்வு ஆளுகை/ முகாமைத்துவ அமைப்பு

இடர்நேர்வு ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவச் செய்முறைகளுக்குச் சிறந்த ஆளுகைக் கோட்பாடுகளைப் பிரயோகிக்கிறது. இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு ஆதரவளிப்பதற்கு முறைசார்ந்த அமைப்பியல்கள் பயன்படுத்தப்பட்டதுடன் மத்திய வங்கியின் அனைத்துத் தொழிற்பாடுகளுக்குமிடையேயான மேற்பார்வையானது தொழிற்பாட்டு அறிக்கையிடல் அதேபோன்று இடர்நேர்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் நிருவாக அறிக்கையிடல், நாணயச் சபை இலங்கை மத்திய வங்கிக்குமிடையிலான முகாமைத்துவம், பல்வேறுபட்ட இடர்நேர்வு முகாமைத்துவம், மேற்பார்வைக் குழுக்கள் மற்றும் ஊழியர்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், இவற்றினூடாக மத்திய வங்கியின் குறிக்கோள்கள் அடையப்படுகின்றன. மத்திய வங்கியின் அனைத்து அமைவிடயங்களினதும் நிதிசார்ந்த, நிதிசாராத இடர்நேர்வுகள் இரண்டும் தொடர்பிலுமான ஒருங்கிணைக்கப்பட்ட மேற்பார்வையினை உயர்மட்ட நிறைவேற்றுக் குழு பேணுகிறது. வழமையாக குழுவின் தொழிற்பாடுகள் நாணயச் சபையின் கீழ் அல்லது அதன் துணைக் குழுக்களின் ஒன்றின் நெருக்கமான கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்றது. நிதியியல் மற்றும் நிதியியல் சாராத இடர்நேர்வுகள் தொடர்பான காத்திரமான மேற்பார்வை, மத்திய வங்கி உள்ளாகின்ற அனைத்து இடர்நேர்வுகளும் அடையாளம் காணப்பட்டு, பகுப்பாய்வுச் செய்யப்பட்டு, மதிப்பிடப்பட்டு, கையாளப்பட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை கூற்றிற்கிணங்க அறிக்கையிடப்பட்டிருப்பதுடன் அவை இடர்நேர்வு விருப்பு/ தாங்கிக்கொள்ளும் மட்டங்களினால் குறித்துரைக்கப்பட்ட அளவுவிதிகளுக்குள் முகாமைப்படுத்தப்படுகின்றன. இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு என்பது மத்திய வங்கிக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை அடையாளம் காண்பதற்கும் பயன்படுத்தப்படும் அமைப்பியல் செய்முறையாக இருப்பதுடன் இடர்நேர்வுகளின் தாக்கத்தினை நீக்குவதற்கு அத்துடன் அல்லது குறைப்பதற்கும் அதேபோன்று உபாயத்தினைக் காத்திரமான விதத்தில் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான உபாயத்தினை வரைவிலக்கணம் செய்கிறது. முதன்மை இடர்நேர்வு அலுவலர் என்பது தலைமைத்துவம், தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான தொலைநோக்கு மற்றும் நெறிமுறை, பொருத்தமான கட்டமைப்பினையும் கொள்கைகளையும் அபிவிருத்தி செய்தல், வங்கியின் இடர்நேர்வு தோற்றப்பாட்டினைத் தெளிவாக தொடர்பூட்டுதல் என்பனவற்றை மேற்கொள்வதன் மூலம் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவச் செய்முறைகளைத் தூண்டுவதற்கான பொறுப்புக்கள் மீது கவனம் செலுத்துமொருவராகக் காணப்படுகின்றார். முதன்மை நிறைவேற்று அலுவலர் ஆளுநருக்கு அல்லது தொடர்பான சபை மட்டத்திலான மேற்பார்வைக் குழுவிற்கு நேரடியாக அறிக்கையளிப்பார்.

இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைக் கூற்று

தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவது முறைசார்ந்த

எழுத்து மூலமான இடர்நேர்வு முகாமைத்துவம் கட்டமைப்பினை மேலோட்டமாக குறிப்பிடல், பொறுப்புக்கள் மற்றும் மதிப்பிடல் மற்றும் இடர்நேர்வுகளைத் தணித்தல் செய்முறைகளைத் தேவைப்படுத்துகிறது. மத்திய வங்கியின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் வங்கியில் இடர்நேர்வு விழிப்புணர்வு கலாச்சாரத்தினை மனதில் பதியச் செய்வதற்கு கடுமையாக முயற்சிப்பதற்குமாக கொள்கை வடிவமைப்பு, அனைத்து நடவடிக்கைகளினதும் மத்திய வங்கிக்குள் மேற்கொள்ளப்படும் செயன்முறைகளினதும் தவிர்க்க முடியாத பகுதியாக விளங்குகிறது. உண்மையில், இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கையானது ஏற்றுக்கொள்ளத்தக்க இடர்நேர்வுகளின் வகைகளையும் நிறுவனமொன்று அதன் குறிக்கோள்களைப் பூர்த்திசெய்வதற்கு ஏற்றுக்கொள்ள விரும்புகின்ற இடர்நேர்வின் மட்டத்தினையும் (இடர்நேர்வின் விருப்பம்) குறித்துரைப்பதுடன் இடர்நேர்வு விருப்பின் எல்லைகளையும் தெளிவாக (தாங்கக்கூடிய இடர்நேர்வு) தருகிறது. தெளிவான இடர்நேர்வு விருப்பக் கூற்றானது, ஏற்றுக்கொள்ளப்பட முடியாத இடர்நேர்வுகளின்படி அனைத்து அலுவலர்களும் அறிந்திருப்பதனையும் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை அலுவலர்களிடையே எடுக்கின்ற கலாச்சாரம் வியாபிப்பதற்கு உதவுவதனையும் உறுதிப்படுத்துகிறது. நாணயச் சபை மட்டத்தில், இடர்நேர்வு விருப்புக் கூற்றுக்கள் மிக உயர்வான மட்டத்தில் இருப்பதிலும் பார்க்க, பரந்தளவான கட்டமைப்பிற்குள் மிக விபரமான விருப்பக் கட்டமைப்பினைத் திணைக்களம், பிரிவு மற்றும் தொழிற்பாட்டு மட்டங்களில் தயாரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். இடர்நேர்வு விருப்பக் கூற்றுக்கள் கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டு உண்மையான அனுபவம், உபாயத்தில் மாற்றங்கள் அல்லது வெளிவாரி அபிவிருத்திகள் என்பனவற்றின் அடிப்படையில் இற்றைப்படுத்தப்படல் வேண்டும்.

தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவம்: மேலிருந்து கீழ் மற்றும் கீழிருந்து மேல் வரையான இடர்நேர்வு முகாமைத்துவம்

இடர்நேர்வுகளின் முகாமைத்துவத்திற்கு ஒட்டுமொத்தமான பொறுப்பினைக் கொண்டிருக்கும் நாணயச் சபை, இடர்நேர்வு விருப்பு, இடர்நேர்வுக் கலாச்சாரம் ஆகிய நியதிகளில் "உச்சத்திலமைந்த சீரிய தன்மையை" உருவாக்கியிருப்பதுடன் பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்று நடைமுறையிலுள்ளமையினையும் உறுதிப்படுத்துகிறது. "உச்சத்திலமைந்த சீரிய தன்மை" என்பது "மேலிருந்து கீழான இடர்நேர்வு முகாமைத்துவம்" எனக் குறிப்பிடப்படுகின்றது. இதன் கருத்து யாதெனில் முகாமைத்துவ அடுக்குகளினூடாக நிறுவனத்தின் கீழ் மட்டத்திலுள்ளவர்களுக்கு செய்திகள் சிறிது சிறதாகக் கசிந்து செல்வதாகும். எனினும், நாணயச் சபை பரந்தளவு விதிமுறைகளை மாத்திரமே கையாளமுடியும். எனவே, நிறுவனத்தின் மேலிருந்து கீழ் வரையான இடர்நேர்வு முகாமைத்துவம் காத்திரமானதாக இருத்தல் வேண்டும். இது "கீழிலிருந்து மேல் வரையான இடர்நேர்வு முகாமைத்துவம்" மூலம் துணை நிரப்பு செய்யப்படல் வேண்டும். அதாவது இடர்நேர்வுத் தீர்மானங்கள், இடர்நேர்வு வெளிப்படுத்துகைகள், இடர்நேர்வுத் தோற்றப்பாடு மற்றும் தொடர்பான கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களினால் குறித்துரைக்கப்பட்ட தொடக்க மட்டத்துடன் ஒப்பிடுகையில் உண்மையான பெறுமதி என்பன தொடர்பிலான கிரமமான தகவல்களின் பாய்ச்சல் சபை மட்டம் வரை இருத்தல் வேண்டும். மேலும், ஏதேனும் பிரச்சனைகள், கரிசனைகள் மற்றும் உயர் இடர்நேர்வு சூழ்நிலைகள் வழிகாட்டல்களுக்காகவும் ஒப்புதலுக்காகவும் நாணயச் சபைக்குக் கொண்டு செல்லப்படல் வேண்டும். இப்பின்னணியில், குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகள் பற்றி கலந்தாராயும் போது, எல்லோரும் ஒரேயளவிலான மட்டத்தில் புரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனத்திற்கென பொதுவான இடர்நேர்வுப் படிமுறை வகைப்படுத்தலைப் பின்பற்றுவது பயன்மிக்கதாகும்.

இடர்நேர்வு முகாமைத்துவம் - மூன்று அடுக்குகள் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவ மாதிரி

பொதுவாக, மத்திய வங்கிகள் "மூன்றடுக்குப் பாதுகாப்பு" இடர்நேர்வு முகாமைத்துவ மாதிரியினையே பிரயோகிக்கின்றன. இதில் தொழிற்பாட்டு முகாமையாளர்கள்/ வியாபாரப் பிரிவுகள் முதலாவது பாதுகாப்பு அடுக்கினையும் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகப் பாதுகாப்புத் திணைக்களங்கள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது அடுக்குகளையும் கொண்டிருக்கின்றன. தொழிற்பாட்டு முகாமையாளர்கள்/ வியாபார அலகுகள் அவர்களது சொந்த இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருக்கின்றன. அவர்கள் அவர்களது வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் அவற்றைச் சரியாகவும் நிறைவாகவும் மேற்கொள்வர் எனவும் செயன்முறைகளை வலியுறுத்துகின்ற விதத்தில் சரியான நடவடிக்கைகளை நடைமுறைக்கிடுவர் எனவும் குறைபாடுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றனர். இரண்டாவது அடுக்குப் பாதுகாப்பு மேற்பார்வைத் தொழிற்பாடுகள் இணங்குவிப்பு மற்றும் முகாமைத்துவத்தினால் உருவாக்கப்படுகிறது. இவை சுயாதீனமான குழு அமைப்பொன்றினூடாக சுயாதீனமாக, கண்காணிக்கப்பட்டு, மதிப்பிடப்பட்டு, இடர்நேர்வு அறிக்கைகள் அளிக்கப்படல் வேண்டும். மேலும், இத்தொழிற்பாடுகள், கொள்கைகள், பாதுகாப்பு வேலை நடைமுறைகள் மற்றும் இடர்நேர்வு மற்றும் இணங்குவிப்பு தொடர்பான மேற்பார்வை மற்றும் வியாபார முன்னரங்குகள் என்பனவற்றை உருவாக்குகின்றன. பாதுகாப்பின் மூன்றாவதும் இறுதியானதுமான அடுக்கு என்பது கணக்காய்வாளர்களையும் நாணயச் சபை உறுப்பினர்களையும் கொண்டிருக்கிறது. உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்கள் இருவரும் அவர்களது தகுதிக்குத் தேவையான மட்டம் வரையில் அவர்களது பணியினை மேற்கொண்டிருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில், வியாபார முன்னரங்குகள் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் விடயத்தில் கிரமமான மேற்பார்வையினை மேற்கொள்வர். நாணயச் சபையின் தலைவர் என்ற ரீதியில் ஆளுநர், மேற்பார்வை மற்றும் வியாபார அடுக்குகளின் கண்காய்வாளரிடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதுடன் எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் பெறப்படும் அறிக்கைகளைப்

பெற்றுக்கொள்வதுடன் எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் பெறப்படும் எந்தவொரு விடயம் தொடர்பிலான விடயத்திலும் நடவடிக்கையினை மேற்கொள்ளும். மூன்றடுக்கப் பாதுகாப்பு காத்திரமான விதத்திலும் சிறந்த நடைமுறைகளுக்கேற்பவும் தொழிற்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவது நாணயச் சபையின் பொறுப்பாகும்.

மூன்றடுக்குப் பாதுகாப்பு மாதிரியினை நடைமுறைப்படுத்தல்

நிறுவனத்தின் குறிக்கோள்களை உருவாக்குவதற்கு கூட்டாகவும் பொறுப்புடைய மற்றும் பொறுப்புக்கூறத்தக்க, இக்குறிக்கோள்களை எய்துவதற்கான உபாயங்களை வடிவமைக்கின்ற, ஆளுகை அமைப்புக்களை நிறுவுகின்ற, அக்குறிக்கோள்களை நிறைவு செய்வதில் இடர்நேர்வுகளை மிகச் சிறந்த முறையில் கட்டுப்படுத்துவதற்கான செயன்முறைகள் என்பனவற்றிற்குப் பொறுப்பாகவுள்ள நிறுவனத்தின் ஆளுகைச் சபை மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் தீவிரமான ஆதரவுடனும் வழிகாட்டலுடனும் மூன்றடுக்குப் பாதுகாப்பு மிகச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. உள்ளகக் கணக்காய்வாளர் நிறுவகத்தின்படி, மூன்றடுக்குப் பாதுகாப்பு மாதிரியின் இடர்நேர்வு மற்றும் கட்டுப்பாட்டுச் செய்முறைகள் பின்வருமாறு நடைமுறைக்கிடப்படுதல் வேண்டும்.

- ஒவ்வொரு பாதுகாப்பு அடுக்கும் பொருத்தமான கொள்கைகளினாலும் வகிபாக வரைவிலக்கணங்களினாலும் ஆதரவளிக்கப்படுதல் வேண்டும்.
- வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் பேணி வளர்க்கும் விதத்தில் பாதுகாப்பின் வெவ்வேறு அடுக்குகளிடையேயும் சரியான இணைப்புக்கள் இருத்தல் வேண்டும்.
- அனைத்துத் தொழிற்பாடுகளும் வினைத்திறனுடைய முறையில் தமது வகிபாகத்தினைச் சிறந்த முறையில் பூரணப்படுத்துவதற்கு உதவும் விதத்தில் வேறுபட்ட அடுக்குகளில் தொழிற்படுகின்ற இடர்நேர்வுகளும் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடுகளும் அறிவினையும் தகவல்களையும் சரியான முறையில் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.
- பாதுகாப்பு அடுக்குகள் அவற்றின் காத்திரமான தன்மைகளை விட்டுக்கொடுக்கும் விதத்தில் இணைந்து கொள்ளவோ இணைக்கப்படவோ கூடாது.
- வேறுபட்ட அடுக்குகளிலுள்ள தொழிற்பாடுகள் இணைக்கப்படுகின்ற சூழ்நிலையில் ஆளும் சபை அமைப்பியல் மற்றும் அதன் தாக்கம் பற்றி ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

சாதாரணமாக, நிறுவனத்தின் குறிக்கோள்கள் வினைத்திறனுடனும் காத்திரமான விதத்திலும் எய்தப்பட்டன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக, பாதுகாப்பினைத் தெளிவாகவும் தனியாகவும் அடையாளம் காணப்பட்ட மூன்று அடுக்குகளிடையேயும் இணைப்புத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் போது தான் இடர்நேர்வு முகாமைத்துவம் வலிமை பெறுகின்றது.

உபாயத் திட்டமிடல், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுகளுக்கிடையேயான உள்ளகத் தொடர்புகள்

அனைத்துக் கொள்கைகளும் வகுப்புக்களும் உபாயத் திட்டமிடல் மட்டத்தில் ஒன்றுகூடுவதன் காரணமாக, உபாயத் திட்டமிடலுக்குப் பொறுப்பானவர்களுடன் இணைப்பினை அபிவிருத்தி செய்தல் உயர்ந்தளவிலானதும் பரஸ்பர ரீதியில் நன்மைகளையும் பயப்பதாகும். முன்னோக்கிய பார்வையுடன் கூடிய உபாயத் திட்டமிடல் தொழிற்பாடு, சாத்தியமான எதிர்கால இடர்நேர்வுகளைத் தவிர்த்து விடுவதற்கு உதவும். இதே அடிப்படையில், நிறுவனத்தின் நாளாந்த வியாபார நடவடிக்கைகளில் நெருங்கிய விதத்தில் காணப்படும் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் உபாயத் திட்டமிடல் செய்முறைக்குப் பொறுப்பாக இருப்பவர்களுக்கு பெறுமதிமிக்க ஆழ்ந்த அறிவினை வழங்கும். உள்ளகக் கணக்காய்வு இடர்நேர்வு முகாமைத்துவச் செய்முறைகளையும் முக்கிய இடர்நேர்வு அறிக்கையிடலையும் மதிப்பிடுவதற்கும் உத்தரவாதங்களை வழங்குவதற்கும் உதவுவதுடன் பொதுவாக இடர்நேர்வு மீதான முகாமைத்துவத்தின் தீர்மானத்தினை சவாலுக்குட்படுத்துகிறது. எனினும், இதேயளவு முறைகளில், உள்ளகக் கணக்காய்வாளர்கள் நிறுவனத்தின் இடர்நேர்வு விருப்பார்வத்தினை நிர்ணயித்தல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவச் செய்முறைகளை விதித்தல் போன்ற விடயங்களில் எத்தகைய வகிபாகத்தினை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதனை அடையாளம் கண்டுகொள்வதும் முக்கியமானதாகும். இதேபோன்று உள்ளகக் கணக்காய்வுகளுடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்வது கூடியளவிற்கு வினைத்திறன் மிக்கதும் காத்திரமானதுமான கணக்காய்வுகளுக்கு வழிவகுக்கும். உதாரணமாக, இடர்நேர்வு முகாமைத்துவ அலுவலர்கள் உபாயத் திட்டமிடல் அலுவலர்களுடன் ஒன்றாக அமர்ந்து ஒவ்வொரு திணைக்களத்தினதும் உபாய/ நடவடிக்கைத் திட்டங்களைக் கலந்தாராய்ந்து இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு கொள்வதனையும்/ அத்தகைய உபாயங்களை நடைமுறைப்படுத்துவதனையும் இயலச்செய்யும். இவ்விதமாக அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளை, இவ்விடர்நேர்வுகளைத் தணிக்கும் விதத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கச் செய்வதற்காக முகாமைத்துவத்திற்கு தொடர்பூட்டுதல் வேண்டும். இவ்விடர்நேர்வுகள், இடர்நேர்வுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வுகளைத் தொடர்வதற்கு உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கு ஒரு அடிப்படையினை வழங்கும்.

இடர்நேர்வு முகாமைத்துவச் செய்முறை

இடர்நேர்வுகளின் காத்திரமான முகாமைத்துவம் வெறுமனே பிரச்சனைகளிலிருந்து தோன்றுகின்ற "நெருப்பினை அணைத்துவிடுதல்" இற்கும் அப்பால் அவை மீண்டும் தோன்றாமலிருப்பதற்கான வழிகளைக் கண்டறிவதிலேயே ஈடுபட்டிருத்தல் வேண்டும். இடர்நேர்விற்கான சூழல் தொடர்ச்சியாக மாற்றமடைந்து வருவதனால் இடர்நேர்வு முகாமைத்துவச் செய்முறைகளை காலத்திற்குக் காலம் மீளஆராய்வதும் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கும்

கையாள்வதற்கும் உதவும் விதத்தில் முகாமைத்துவ உத்திகளை முறையியல் ரீதியாக பிரயோகிப்பதும் முக்கியமானதாகும். அனைத்து இடர்நேர்வுகளும் பொதுவான காரணத்தினைக் கொண்டிருப்பதனால் அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறியக்கூடியதாக இருக்கும். அடிப்படைக் காரணத்தினைப் பகுப்பாய்வு செய்வதென்பது பிரச்சனைகளினதும் சம்பவங்களினதும் அடிப்படைக் காரணங்களை அடையாளம் காண்பதற்காக அவற்றிற்குப் பதிலிறுப்பதற்குப் பொருத்தமான அணுகுமுறைகளைக் கண்டு கொள்வதும் முறையியல் சார்ந்த செய்முறையாக இருக்கிறது. அடிப்படைக் காரணங்களை இச்சம்பவம் ஏன் நிகழ்ந்தது என்பது பற்றிய சரியான கேள்வியைக் கேட்பதன் மூலம் அடையாளம் கண்டு கொள்ளமுடியும். இதுவும் நிகழ்வதற்கான சாத்தியங்களையும் ஏற்படக்கூடிய தாக்கங்களின் பாரதூரமான தன்மையினைப் புரிந்து கொள்வதற்கும் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளுக்கு முன்னுரிமையளிப்பதற்கும் முக்கியமானதாகும்.

உண்மையில், தாழ்ந்த அளவில் இடம்பெறக்கூடிய இடர்நேர்வுகளும் குறைந்த தாக்கங்களும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பதிலிறுப்புக்களை அவை தேவைப்படுத்துவதுமில்லை. இடர்நேர்வுகளைத் தாங்குகின்ற உயர் சாத்தியங்களைக் கொண்ட நிகழ்வும் குறிப்பிடத்தக்க தாக்கங்களும் உண்மையில் “ஆபத்து வலயத்தினை” உருவாக்குகின்றன. சுட்டப்படுகின்ற இவ்விடர்நேர்வுகளை அவசரமான சில விடயங்களின் மூலம் ஒன்றில் நிகழக்கூடிய சாத்திங்களைக் குறைப்பதற்கென வடிவமைக்கப்பட்ட தடுக்கக்கூடிய கட்டுப்பாடுகளை நடைமுறைக்கிடுவதன் மூலம் அல்லது இடர்நேர்வு நிகழ்வுகளின் தாக்கத்தினைத் தணிப்பதனை நோக்கமாகக் கொண்ட சரிசெய்யும் கட்டுப்பாடுகளூடாக கட்டுப்படுத்தப்படல் வேண்டும். இவ்விரண்டு தீவிரமான விடயங்களுக்கிடையில் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளுக்காக, சாத்தியமான நிகழ்வுகளைத் தணிப்பதற்கான அல்லது இடர்நேர்வு நிகழ்வுகளின் தாக்கத்தினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை வடிவமைக்க முடியும். மாறாக, இடர்நேர்வுகளை ஒழிக்கின்ற விதத்தில் அத்தகைய இடர்நேர்வுகளை நிறுத்துதல் வேண்டும் அல்லது இடர்நேர்வுகளை மற்றொரு தரப்பிற்கு மாற்றல் செய்ய முடியும். சில நேரங்களில் குறிப்பிட்ட இடர்நேர்வுகளுக்குச் சிறந்த முறையில் பதிலிறுப்பது என்பது மிகச் சுலபமாக இடர்நேர்வினை ஏற்றுக்கொள்வதாக அமையும்.

இடர்நேர்வுக் கட்டுப்பாடுகளும் மீதமுள்ள இடர்நேர்வுகளும்

இடர்நேர்வுக் கட்டுப்பாடுகள் என்பது சாத்தியமான இழப்புக்களைக் கட்டுப்படுத்த உதவுகின்ற உபாயத்தின் முக்கிய கூறொன்றாகும். நிறுவனமொன்றின் இடர்நேர்வினைத் தாங்கிக் கொள்ளும் தன்மை தேவையான கட்டுப்பாடுகளை அதிகரித்துக் கொள்வதற்குப் பயன்மிக்கதாக இருக்கும். இடர்நேர்வுக் கட்டுப்பாட்டு முறைகளைத் தவிர்த்தல், இழப்புக்களைத் தடுத்தல், இழப்புக்களைக் குறைத்தல், வேறாக்குதல், இரட்டித்தல் மற்றும் பன்முகப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. பெயர் சுட்டுகின்றவாறு, இடர்நேர்வினைத் தவிர்ப்பதென்பது இழப்புக்களினால் பாதிக்கப்படக்கூடிய நிகழ்தகவினை 0 சதவீதத்தில் கொண்டிருப்பதனை கவனத்தில் கொள்கையில் இடர்நேர்வுக் கட்டுப்பாடுகளை உருவாக்குவது மிகச் சிறந்த முறையாக எண்ணப்படுகிறது. இழப்புக்களைத் தடுத்தல் என்பது இழப்புக்களை ஒழிப்பதிலும் பார்க்க வரையறைகளைக் கொண்டதொரு உத்தியாகும். இழப்புக்களைக் குறைத்தல் என்பது இன்னொரு உத்தியாகும். இது இடர்நேர்வினை ஏற்றுக்கொள்வது மட்டுமன்றி, இடர்நேர்வின் விளைவாக இழப்புக்கள் ஏற்படக்கூடும் என்ற உண்மையினை ஏற்றுக்கொள்ளச் செய்வதுமாகும். வேறாக்குதல் என்பது முக்கிய சொத்துக்களைப் பிரித்து விடுவதுடன் தொடர்புபட்டதாகும். இது ஒரு அமைவிடத்தில் ஏதேனும் பெரும் ஆபத்து நிகழுமாயின் அதனைத் தொடர்ந்து வியாபாரத்திற்கான தாக்கம் அவ்வமைவிடத்திற்கு மட்டும் கட்டுப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துகிறது. குறிப்பாக, தகவல் தொழில்நுட்பவியல் முறைமைகளைப் பொறுத்தவரை இரட்டித்தல் முக்கியமாக பின்னூட்டல் திட்டங்களை உருவாக்குவதுடன் தொடர்புபட்டதாகும். இது மூலவளங்களை வேறுபட்ட வகைகளிடையே ஒதுக்குவதாகும். இதன் மூலம் தாக்கம் குறைக்கப்படுகிறது. சில நேரங்களில் கட்டுப்பாடுகள் பிரயோகிக்கப்பட்டபின்னரும் கூட இடர்நேர்வுகள் மீதமுள்ள வடிவங்களில் நிலவக்கூடும். உத்வேகம் மிக்க கட்டுப்பாட்டுச் சூழல் மத்திய வங்கி தாழ்ந்த மீதமுள்ள தாக்கங்களுடன் தொழிற்படுவதனை அனுமதிக்கிறது.

நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம்

மத்திய வங்கிகளும் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டனவாக இருப்பதுடன், நிதியியல் இடர்நேர்வுகளுக்கான அதன் வெளிப்படுத்துகைகளைக் காத்திரமான முறையில் முகாமைப்படுத்துவதற்குப் பொருத்தமான முறைமைகளும் நடவடிக்கை முறைமைகளும் நடைமுறைக்கிடப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துவதற்கும் பொறுப்புடையதாகும். முதலீட்டுச் சொத்துப்பட்டியலொன்றின் ஒட்டுமொத்த இடர்நேர்வு வருமானத் தோற்றப்பாட்டினை வரைவிலக்கணம் செய்யும் உபாயச் சொத்து ஒதுக்கு நீண்ட கால முதலீட்டின் வெற்றியின் முக்கிய தூண்டுநராகச் செயலாற்றுகிறது. உபாயச் சொத்து ஒதுக்கு பல்வேறு பிரிவுகளை உள்ளடக்குகிறது. இதன் குறிக்கோள்கள் பல்வேறுபட்ட நிதி முகாமைத்துவக் குறிக்கோள்களுடன் பொருந்துவனவாகவுள்ளன. உபாயச் சொத்து ஒதுக்குகளின் முக்கியமான காரணிகள் முதலீட்டுக் குறிக்கோள்கள் நாணய உள்ளமைப்பு (ஏதேனுமிருப்பின்) இடர்நேர்வினைத் தாங்கும் மட்டங்கள், முதலீட்டுக் காலம், முதலீட்டு நம்பிக்கைகள் மற்றும் மூலதனச் சந்தைகளின் செயலாற்றம் பற்றிய எடுகோள்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. நாணயச் சபை சொத்து ஒதுக்கு, இடர்நேர்வினைத் தாங்கிக் கொள்ளும் தன்மை, கொள்கை அடிப்படை அளவுக் குறியீடுகள், மீள்நிலைப்படுத்தல் உபாயங்கள் மற்றும் தீவிரமான இடர்நேர்வு முகாமைத்துவ உத்திகள் என்பனற்றைக் குறித்துரைக்கின்ற முதலீட்டுக் கொள்கைக் கூற்றுக்களுக்கும் முதலீட்டு வழிகாட்டல்களுக்கும் ஒப்புதலளிக்கிறது. மத்திய வங்கிகளும் பல்வேறுபட்ட இடர்நேர்வு அளவையியலூடாக தொடர்ச்சியான அடிப்படையில் முதலீடுகளைக் கண்காணித்து வருகின்றன. சந்தை இடர்நேர்வுக்

காலம், இடர்நேர்வின் மதிப்பீடு போன்றவற்றைப் பயன்படுத்திக் கண்காணிக்கப்படுகின்ற வேளையில், கொடுகடன் இடர்நேர்வு பன்னாட்டுக் கொடுகடன் தரமிடல் முகவர்களினால் விடுக்கப்பட்ட கொடுகடன் தரமிடல்களையும் கொடுகடன் செலுத்தத் தவறிய பரஸ்பர பரிமாற்றல் விலைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி முதலீடுகளைச் செய்துள்ள நிறுவனங்கள் பற்றிய செய்திகளின் மிகக் கவனமான கண்காணிப்பு என்பனவற்றைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றன. நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்பான நிதியியல் இடர்நேர்வுகள் தொடர்பான முதலீட்டு மேற்பார்வைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இடர்நேர்வுக் கலாச்சாரம்

அலுவலர்கள், தனிப்பட்டவர்கள் அல்லது எல்லோரினதும் நடத்தைகளை அவர்களது தீர்மானங்களை மேற்கொள்வதிலும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதனூடாகவும் கலாச்சாரம் தூண்டுதல்களை மேற்கொள்கின்றது. விரும்புகின்ற கூற்றுக்கள் கட்டமைப்புக்கள் தொடர்பில் அல்லது அவற்றை நடைமுறைக்கிடுவது தொடர்பில் அலுவலர்கள் புரிந்துணர்வினைக் கொண்டிருக்காவிடின் அவை சிறிதளவு பெறுமதிகளையே கொண்டிருக்கும். தெளிவான இடர்நேர்வு விருப்பக் கூற்றுக்கள் மற்றும் உத்வேக இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பும் கூட அலுவலர்களின் தவறான நடத்தையினால் குறைத்து மதிப்பிடப்படலாம். இடர்நேர்வுகள் அதிகரித்து வருகின்றன என்ற எச்சரிக்கை அறிகுறிகளைக் கவனத்தில் கொள்ளத் தவறுவது, தேவைப்படுத்தப்பட்ட நடவடிக்கை முறைகளை பொருட்படுத்தாமை, தனிப்பட்டவர்களின் புறக்கணிப்பு என்பன முன்மொழிவுகளை நிராகரிப்பது போன்று தெரிவதுடன் விதிகளும் கட்டுப்பாடுகளும் ஏற்புடைத்தானவையல்ல என்ற விதத்தில் அத்தகைய தேவைப்பாடுகளுக்கு விளக்கமளிப்பதன் மூலம் அத்தகைய நடத்தைகள் மத்திய வங்கியை தாங்கக்கூடிய மட்டங்களுக்கு அப்பால் இடர்நேர்வுகளுக்குட்படுத்துகின்றன. இவற்றில் சில அவை கண்டுபிடிக்கப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கும் முன்பே இடம்பெற்றிருக்கின்றன. எனவே, முகாமைத்துவம் ஏற்றுக்கொள்ளத்தக்க நடத்தைகளைத் தெளிவாக விபரிப்பதும் தவறான நடத்தைகளுக்கெதிராக சரியான நடவடிக்கைகளை எடுப்பதும் முக்கியமானதாகும். அவ்வாறு செய்யத் தவறுவது மோசமான நடத்தைகளுக்கு இட்டுச்செல்லும். ஏற்றுக்கொள்ளத்தக்க நடத்தைகளை வெளிப்படையாகப் புகழ்ந்து பேசுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைகளைக் கண்டிப்பது/ தண்டிப்பதும் இடர்நேர்வுக் கலாச்சாரத்தினை வலுப்படுத்தும்.

இடர்நேர்வுத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல்

இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மூலக்கூறு யாதெனில் இடர்நேர்வுகளைச் சரியான நேரத்தில் அடையாளம் காண்பதும் அதனைத் தணிப்பதற்கு மிகப் பொருத்தமான வழிமுறைகளைத் தெரிவுசெய்வதற்கான இயலாற்றலைக் கொண்டிருப்பதுமேயாகும். எதிர்வரும் மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகள் வரையான காலப்பகுதியில் நன்கு வடிவமைக்கப்பட்ட முயற்சிகளை மேற்கொள்வது தொழிற்பாட்டுச் சூழலில் பல முக்கியமான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கு அடிக்கடி உதவும். உலகின் பரிணாம வளர்ச்சி அதிகரிக்கின்ற வேகத்திற்கு இணையாக மக்கள் சில நேரங்களில் விரைவாகத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதால், அனைத்துத் தகவல்களையும் மதிப்பிடுவதற்குப் போதுமான நேரம் இல்லாமையினால் மிகுந்த நிச்சயமற்ற தன்மைகளின் கீழ் சரியான விடயங்கள் அடிக்கடி புறக்கணிக்கப்படலாம். இம்முயற்சியில் வரலாற்று ரீதியான இடர்நேர்வுத் தோற்றப்பாடு பயன்மிக்கதாக இருப்பினும் கூட, தீர்மானங்களை மேற்கொள்கின்ற கட்டமைப்பிற்குள் கவனத்தில் கொள்ளப்படுகின்ற எடுகோள்களைச் ஆட்சேபனைக்குட்படுத்துவது முக்கியமானதாகும். 1996இன் விற்பனையில் சாதனை புரிந்த பீட்டர் பேர்ண் டெய்யின் கடவுளுக்கெதிரான இடர்நேர்வு என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். “கடந்தகால மாதிரிகளினால் தீர்மானிக்கப்பட்டவாறு கணியம்சார்ந்ததும் இலக்கங்களை அடிப்படையாகக் கொண்டதுமான தீர்மானங்களா அல்லது நிச்சயமற்ற எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்கின்ற, கூடியளவிற்கு துறைசார்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களா சிறந்தவை என்பது தொடர்பில் இருசாராருக்குமிடையிலான பதற்றநிலைமை விடாப்பிடியாக தொடரவே செய்யும்”. சிலர் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பது ஒரு கலை என்ற கருத்தினைக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் இவ்வகிபாகத்திலுள்ள மக்கள் அவர்களது தீர்மானங்களுக்கு வழிகாட்டக்கூடிய நேரடியான தகவல்கள் எதிர்பார்க்கின்றமையால் அவர்கள் தீர்மானங்களை எடுக்கும் விதத்தில் மிகச்சரியான விடைகளை அளிக்க வேண்டுமென்பதனை உணர்வதில்லை. கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதனை அளவிடுவது, சம்பவங்களை நிறுத்தி வைப்பது, இடர்நேர்வுப் பதிவேடுகளின் விபரங்களைத் தயாரிப்பது மற்றும் கட்டியெழுப்புவது என்பன போன்ற எல்லா விடயங்களும் கூடுதலானளவிற்கு விஞ்ஞானம் சார்ந்தவற்றை அடிப்படையாகக் கொண்டிருப்பது போல் காணப்படுகின்றன. பரந்த மூலங்களிலிருந்து தரவுகளைச் சேகரிப்பது இலகுவான ஒப்பீடுகளுக்காக ஒரே வடிவமைப்பினை உறுதிப்படுத்துவது, விதிகள், கொள்கைகள், நடவடிக்கை முறைகளைப் பிரயோகிப்பது இவையனைத்தும் மிகத் தெளிவானவையாகவும் விஞ்ஞான ரீதியானதாகவும் இருத்தல் வேண்டும். “கலை” என்பது மன உள்ளுணர்வு, நிபுணத்துவம் மற்றும் முழு நிறுவனத்தினதும் ஒன்றுதிரண்ட பார்வை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வாகவும் கொள்கை வகுப்பாகவும் காணப்படுகின்ற வேளையில் “விஞ்ஞானம்” என்பது குறிக்கோள், கணியம்சார் அளவுமுறைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வதனைக் குறிக்கிறது. இடர்நேர்வு முகாமைத்துவத்தினை இவ்விரண்டினதும் கலவை என விளக்க முடியும். விஞ்ஞான அணுகுமுறையினை மாத்திரம் கொண்டுள்ள அணுகுமுறையொன்று இதற்குத் தேவைப்படுகிறது. இது, இதற்கு முன்னர் நிகழ்ந்தவற்றைப் பகுப்பாய்வு செய்வதுடன் இதிலிருந்து கற்றுக்கொள்ளவும் செய்கிறது. எவ்வாறெனினும், ஆழ்ந்த அறிவும் கற்பனை சக்தியும் முக்கியமானவையென்பதுடன் சரியான சூழ்நிலையில் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு மனித நியாய தர்க்கங்களும் இயல்பூக்கமும் மிக இன்றியமையாதனவாகும்.

நெருக்கடியான நேரங்களில் இடர்நேர்வு முகாமைத்துவம்

மத்திய வங்கிகள் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் என்ற அவற்றின் வகிபாகங்களுக்கிடையில் சமநிலையொன்றினை நிலைநிறுத்த அயராது முயற்சிப்பதனால் மத்திய வங்கிகளின் கொள்கைத் தீர்மானங்களுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகள் அதன் ஆர்வலர்களுக்கும் பொருளாதாரத்திற்கும் நிச்சயமற்ற தன்மையினை உருவாக்கக்கூடும். இவ்விடர்நேர்வுகள் பொருளாதாரத்தில் சமநிலையற்ற தன்மையினை அங்கீகரித்திருக்கிறது. இச்சமநிலையற்ற தன்மையினைச் சரியான நேர அடிப்படையில் தணிக்கத் தவறுவது குழப்பகரமான சீராக்கங்களைத் தேவைப்படுத்தும். நெருக்கடிகள் தோன்றியதும் இடர்நேர்வின் தன்மை மாறுகிறது. கொள்கை வகுப்போரினால் மேலதிக நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. மத்திய வங்கி அதன் உடனடித் தாக்கத்தினைத் தணிப்பதற்காக நெருக்கடி முகாமைத்துவத்திற்கு முன்னுரிமையளிக்கும் விதத்தில் மத்திய வங்கி அதன் வேகத்தினை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். மரபுவழியற்ற முறைகளும் பரீட்சிக்கப்படாத தலையீடுகளும் புதிய உறுதியானதொரு நிலைக்கு பொருளாதாரத்தினை முன்கொண்டு செல்வதற்கு விரித்துரைக்கப்பட்ட போதும் இயல்பாகவே அவற்றுடன் இணைந்துள்ள இடர்நேர்வுகளைத் தொடர்ச்சியான அடிப்படையில் கண்காணிக்கப்படல் வேண்டும். அதேநேரம், அவற்றின் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளையும் மேற்பார்வை அதிகாரங்களையும் கவனத்தில் கொள்கையில், மத்திய வங்கிகள், நிதியியல் சமூகத்தினிடையே புதிய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும் மிகச் சிறந்த நடைமுறைகளை மேற்கொள்வதன் மூலமும் வங்கித்தொழில் சமூகத்திற்கும் நிதியியல் முறைமைக்கும் முன்னுதாரணமாக விளங்குவதற்கு அயராது உழைத்தல் வேண்டும். "இடர்நேர்வற்ற" நிறுவனங்கள் என்று ஒன்றுமேயில்லை என்பதனைக் கவனத்தில் கொள்கையில், மத்திய வங்கியின் இரண்டு குறிக்கோள்களான விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றினை இழக்காமல், இடர்நேர்வுகளைக் கையாள்வதற்கென அதற்காகச் சரியான முறையில் வடிவமைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு நம்பிக்கையின் தூணாக விளங்குவதுடன் நிதியியல் முறைமையிலும் அதேபோன்று பொருளாதாரத்திலும் நம்பிக்கை கொள்ளச் செய்கிறது.

முடிவுரை

மத்திய வங்கிகளில் தொழில்முயற்சியின் அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவது அதன் குறிக்கோள்களில் அவற்றின் எதிர்காலப் பெறுபேறுகளில் செல்வாக்கினை ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வுகளின் முழுமையான தோற்றப்பாட்டினை வழங்குகிறது. வழமையாக, மத்திய வங்கிகள் பழமைவாய்ந்த நிறுவனங்களாகவே பொதுமக்களினால் பார்க்கப்படுகின்றன. எனவே, சிறந்த புகழ் கொள்கை குறிக்கோள்களை எய்துவதில் வெற்றிபெறுவதற்கு திறவுகோலாக விளங்குகிறது. எது எவ்வாறெனினும், நெருக்கடியான நேரங்களில், மத்திய வங்கிகள் உண்மையில் அவற்றின் கொள்கைகளை வகுக்கும் இயலாற்றலில் மேலதிக இடர்நேர்வுகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. எனவே, மத்திய வங்கியின் வியாபாரத்தையும் புகழுடன் தொடர்பான இடர்நேர்வுகளையும் சிறந்த முறையில் முகாமைப்படுத்தும் பொருட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் உபாயத் திட்டமிடலுடனும் உள்ளகக் கணக்காய்வுடனும் ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும். மூன்றடுக்குப் பாதுகாப்பு மாதிரி எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதனை பொருட்படுத்தாமல் மூத்த முகாமைத்துவமும் ஆளுகைச் சபைகளும் பகிரப்பட வேண்டிய தகவல்களும் நிறுவனத்தின் இடர்நேர்வுகள் மற்றும் கட்டுப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருக்கும் ஒவ்வொரு குழுமங்களிடையே நடவடிக்கைகளை இணைப்பதற்குமாக எதிர்பார்ப்புக்களைத் தெளிவாக தொடர்பூட்டுதல் வேண்டும். இடர்நேர்வு முகாமைத்துவத்தின் முக்கிய கூறு யாதெனில் சரியான நேரத்தில் இடர்நேர்வினை அடையாளம் கண்டுகொள்வதும் இடர்நேர்வினை ஒன்றில் தாங்கிக் கொள்வதற்கு, தணிப்பதற்கு அல்லது ஒழித்துவிடுவதற்கு மிகப் பொருத்தமான வழிமுறைகளைத் தெரிவுசெய்து கொள்வதுமேயாகும். அனைத்து இடர்நேர்வுகளும் இடர்நேர்வு விருப்பு, நிறுவனத்தின் சபை மற்றும் முகாமைத்துவத்தினால் நிர்ணயிக்கப்பட்ட இடர்நேர்வினைத் தாங்கும் மட்டங்களையும் உறுதிப்படுத்துவதற்கு தொழில்முயற்சியின் அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவம் மேலிருந்து கீழ் வரையிலான அணுகுமுறையினையும் கீழேயிருந்து மேல் வரையிலான அணுகுமுறையினையும் இணைக்கிறது. உண்மையில், தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு நிறுவனங்களிடையே கட்டியெழுப்பப்படுகின்ற விடத்து நிறுவனத்தின் இடர்நேர்வுக் கலாச்சாரம் முக்கிய வகிபாகத்தினை ஆற்றுகின்றது. அதிகரிக்கின்ற தளம்பல்கள் மற்றும் வேறுபட்ட துறைகளிலிருந்தான இடர்நேர்வுகள் ஒருங்கிணைக்கப்படுகின்றமை என்பனவற்றின் காரணமாக மத்திய வங்கிகள் அவற்றின் நீண்ட கால ஆற்றல் வாய்ந்த தன்மை மற்றும் புகழ் என்பனவற்றினைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இடர்நேர்வு முகாமைத்துவச் செய்முறைகளையும் முறைமைகளினதும் நம்பத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகப் பொருத்தமான தொழில்முயற்சியின் அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை மத்திய வங்கிகள் நடைமுறையில் வைத்திருப்பது முக்கியமானதொன்றாகும். இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடு சரியான கலப்புத் தேர்ச்சிகள், தகுதிவாய்ந்த தன்மை, கருவிகள் மற்றும் முறைமைகள், சரியான நேரத்தில் கண்காணித்தல் மற்றும் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை அறிக்கையிடல் மற்றும் அனைத்து மட்டங்களிலுமான நடவடிக்கைத் திட்டங்கள் என்பன உட்பட இதன் பணிகளை நிறைவேற்றுவதற்கான பொருத்தமான இயலாற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். பொதுவாக, மத்திய வங்கிகளுக்கான இடர்நேர்வு முகாமைத்துவம் இயக்கவாற்றல் வாய்ந்த தொழிற்பாடொன்றாகும். இது கணக்காய்வு மற்றும் வெளிவாரி மதிப்பீடுகளூடான அனுபவம் மற்றும் காலாந்தர மீளாய்வுகள் என்பனவற்றுடன் சேர்த்து தொடர்ச்சியாக மேம்படுத்தப்படல் வேண்டும்.

தடயவியல் கணக்காய்வொன்றின் வகிபாகம் என்ன?

சுரேகா கெத்தவல
துணைப் பணிப்பாளர்
பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

உலகம் முழுவதிலும் ஏமாற்று நடவடிக்கைகளும் மோசடி நிறைந்த நிதியியல் கொடுக்கல்வாங்கல்களும் ஆண்டிற்காண்டு எண்ணிக்கையில் அதிகரித்து வருகின்றன. தற்பொழுது, இம்மோசடி நடவடிக்கைகளும் கொடுக்கல்வாங்கல்களும் மிக நவீனத்துவம் வாய்ந்தனவாகவும் முன்னொருபோதுமில்லாத அளவிற்கு சிக்கல் நிறைந்தனவாகவும் காணப்படுகின்றன. இதன் விளைவாக, வியாபாரங்களும் நிறுவனங்களும் மோசடி நடவடிக்கைகளினதும் பொய்யான வியாபார நடவடிக்கைகளினதும் உயர் இடர்நேர்வுகளுக்குள்ளாகி வருகின்றன. இது, கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக உலகம் முழுவதிலும் இடம்பெற்றுவரும் பல கம்பனி கணக்கீட்டு அவதூற்று நடவடிக்கைகளினாலும் உயர் தோற்றப்பாட்டினைக் கொண்ட கம்பனி மோசடிகளினாலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவற்றிற்கு ஒரு சில உதாரணங்களாக என்ரன் அவதூறு வேர்ள்ட்கொம் ஏமாற்று மற்றும் சத்யம் கணனி மோசடி என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவ்வகையான கம்பனி ஏமாற்றுக்களும் மோசடி நடவடிக்கைகளும், இன்று தடயவியல் கண்காய்வு வளர்ந்துவரும் தொழில் துறையாக அபிவிருத்தியடைவதற்கான முக்கிய காரணங்களிலொன்றாகக் காணப்படுகின்றன.

தடயவியல் கணக்காய்வு என்றால் என்ன?

பொதுவாக "தடயவியல்" என்பதன் கருத்து "சட்ட ரீதியான நீதிமன்றமொன்றில் பொருத்தமானவாறு பயன்படுத்தப்படுவது" என்பதாகும். தடயவியல் கணக்காய்வு என்பது சட்ட நீதிமன்றமொன்றில் அல்லது சட்ட வழக்காடலில் பயன்படுத்தக்கூடிய சான்றொன்றினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு நிறுவனமொன்றின் அல்லது தனிப்பட்டவரின் நிதியியல் மற்றும் ஏனைய தொடர்பான பதிவேடுகளைப் பரீட்சிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும் மதிப்பிடுவதற்குமான முறையியல் சார்ந்ததொரு அணுகுமுறையாகும். மறுசொற்களில் கூறுவதாயின் சட்ட நீதிமன்றத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறான நியமத்தில நிதியியல் பிரச்சனைகள், குற்றங்கள், ஏமாற்றுக்களுக்கு தீர்வு காணும் நோக்கத்திற்காக புலனாய்வு மற்றும் பகுப்பாய்வுத் தேர்ச்சிகளைப் பிரயோகிக்கின்ற முறையாகும். சான்றுகள் சட்ட நீதிமன்றமொன்றில் பயன்படுத்துவதற்கான சாத்தியம் இருக்குமாயின், கிரமமான கணக்காய்விற்குப் பதிலாக, பொதுவாக தடயவியல் கணக்காய்விற்கு முன்னுரிமையளிக்கப்படுகிறது.

தடயவியல் கணக்காய்வுகள் மோசடி, கணக்கீடு மற்றும் கணக்காய்வு நடவடிக்கை முறைகள் துறைகளிலும் அதேபோன்று அத்தகைய கணக்காய்வொன்றின் ஏற்புடைத்தான சட்டக் கட்டமைப்பிலும் நிபுணத்துவத்தினையும் தகைமைகளையும் பெற்றிருப்பது அவசியமாகும். மேலும், இது, முக்கியமாக நிதி, தகவல் தொழில்நுட்பவியல், கணியம்சார் முறைகள் தடயவியல் டிஜிட்டல் பிம்பப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் விசேட தேர்ச்சியைத் தேவைப்படுத்துகிறது.

தடயவியல் கணக்காய்வு நடவடிக்கைகள் எவ்வாறு பரிணாம வளர்ச்சியடைகின்றன?

தடயவியல் கணக்காய்வு தொடர்பான நடவடிக்கைகள் பற்றி 1930கள் வரை முறையாக விபரிக்கப்பட்டிருக்கவில்லை. 1930களில் ஐக்கிய அமெரிக்க உண்ணாட்டரசிறை பணிக்காகப் பணியாற்றும் சான்றளிக்கப்பட்ட அரச கணக்காய்வாளரான பிராங் வில்சன் தடயவில் கணக்காய்வினை உருவாக்கியமைக்கான பெருமையினைப் பெற்றார். சட்டத்திற்கு மாறான பல்வேறு நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட அல்கபோன் என்ற குற்றவாளியின் கொடுக்கல்வாங்கல்களைப் புலனாய்வு செய்யும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. விபரமான பகுப்பாய்வுகளும் நிதியியல் பதிவேடுகளின் புலனாய்வும்

கபோனினால் இழைக்கப்படட வருமான வரி மோசடிகளை எடுத்துக்காட்டின. கபோன் சட்டத்திற்கு முரணான சூதாட்ட இலாபங்களிலிருந்து ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்திற்கு ஐ.அ.டொலர் 215,080.48 இனைச் செலுத்த வேண்டியிருந்தது. அவர் வரி ஏய்ப்பிற்காக குற்றவாளியாகக் காணப்பட்டு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். பிரசுரமான தகவல்களின்படி தடயவில் கணக்காய்வு என தற்பொழுது அங்கீகரிக்கப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

அதன் பின்னர், தடயவியல் கணக்காய்வு தொழில்நிபுணத்துவம் கணிசமானளவு பரிணாம வளர்ச்சியைக் கண்டுள்ளது. இவ்வபிவிருத்தி மீது சமூகங்கள் பொருளாதாரங்கள், வழக்காடல் நடவடிக்கை முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்தியூடாக ஏற்பட்ட மாற்றங்கள் கணிசமானளவு செல்வாக்கினைச் செலுத்தின.

வரலாற்றினை மீளாய்வு செய்யும் போது, ஐக்கிய அமெரிக்காவின் 2002இன் சார்பேனிஸ்-ஒக்ஸ்லி சட்டம் தடயவியல் கணக்காய்வு தொழில்சார் நிபுணத்துவத்தின் மீது பெருமளவு தாக்கத்தினை வழங்கியது. இச்சட்டவாக்கம் உள்ளகக் கணக்காய்வாளர்களின் தொழிற்பாடுகளுக்கும் நிறுவன ரீதியான முகாமைத்துவத்திற்கும் வசதியை வழங்குமெனக் கருதப்பட்ட போதும், இது தடயவியல் கணக்கீட்டு தொழில் நிபுணத்துவத்திற்கு புதிய வாய்ப்புக்களைக் கொண்டு வந்தது. இச்சட்டவாக்கம் இற்றைப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, சட்டத்திற்கு மாறாக இடம்பெறும் தகவல்களை அறிவிப்பது தொடர்பான பாதுகாப்பின் காரணமாக, தடயவியல் கணக்காய்விற்கான கேள்வி அதிகரித்தது.

இவ்விடயங்கள் பரிணாமமடைந்தமையின் காரணமாக, தடயவியல் கணக்காய்வு தொடர்பன நடவடிக்கைகளும் பணம் தூயதாக்கல் மோசடி, பரீட்சிப்புக்கள், சொத்துக்களைக் கண்டறிதல், குற்றவியல் புலனாய்வுகள், நிதியியல் தொடர்பாக தவறான அறிக்கையளித்தல், தவறான நிதிகள், கடுமையான குற்றங்கள் தொடர்பான பணப் பெறுகைகளை அறவிடல் நிதியியல் தவறான நடத்தைகள் மற்றும் பொய்யான

தகைமையின் பெயர்	தகைமையினை வழங்கும் நிறுவனம்
சான்றுபடுத்தப்பட்ட தொழில்சார் தடயவியல் கணக்காளர்	இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் தடயவியல் கணக்காய்வாளர் சான்றிதழ்படுத்தல் சபை, ஐக்கிய இராச்சியம்
☐ சான்றுபடுத்தப்பட்ட தொழில்சார் தடயவியல் கணக்காளர் ☐ தடயவியல் கணக்கீட்டில் சான்றிதழ் ☐ சான்றுபடுத்தப்பட்ட மோசடி சிறப்பியலாளர்	சான்றுபடுத்தப்பட்ட தடயவியல் கணக்காளர் பன்னாட்டு நிறுவகம், ஐக்கிய அமெரிக்கா
சான்றுபடுத்தப்பட்ட மோசடி பரீட்சகர்	சான்றுபடுத்தப்பட்ட மோசடி பரீட்சகர் சங்கம், ஐக்கிய அமெரிக்கா
சான்றுபடுத்தப்பட்ட தடயவியல் கணக்காளர்	தடயவியல் கணக்கீட்டின் அமெரிக்கச் சபை
தடயவியல் கணக்கீடு மற்றும் மோசடிகளைக் கண்டுபிடிப்பது மீதான சான்றிதழ் பாடநெறி	இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவகம்
நிதியியல் தடயவியல் கணக்கீட்டு தகைமை	சிங்கப்பூர் பட்டயக் கணக்காளர் நிறுவகம்
சான்றுபடுத்தப்பட்ட நிதியியல் தடயவியல்	பட்டய தொழில்சார் கணக்காளர்கள் கனடா
சான்றுபடுத்தப்பட்ட தடயவியல் கணக்காளர்	சான்றுபடுத்தப்பட்ட தடயவியல் கணக்காளர் நிறுவகம்
நிதியியல் தடயவியல் அறிமுகங்களுடன் சான்றுபடுத்தப்பட்ட பொதுக் கணக்காளர்கள்	சான்றுபடுத்தப்பட்ட பொதுக் கணக்காளர்கள், ஐக்கிய அமெரிக்கா
☐ தடயவியல் கணக்காய்வில் டிப்ளோமா ☐ பிரயோக தடயவியல் கணக்காய்வில் விஞ்ஞான பட்டதாரி ☐ பிரயோக தடயவியல் கணக்காய்வில் பட்டப்பின் டிப்ளோமா ☐ பிரயோக தடயவியல் கணக்காய்வில் விஞ்ஞான முதுமானி ☐ பிரயோக தடயவியல் கணக்காய்வில் முனைவர் தத்துவம்	சிம்பாவவே தடயவியல் கணக்காய்வளர் நிறுவகம்
இணைந்த மற்றும் உறுப்புரிமையைப் பெற்றவர்	பாகிஸ்தான் தடயவியல் கணக்காளர் நிறுவகம்
☐ சான்றுபடுத்தப்பட்ட தடயவியல் கணக்காளர் ☐ உறுப்புரிமையைப் பெற்ற தடயவியல் கணக்காளர்	நைஜீரிய தடயவியல் கணக்காளர் நிறுவகம்

சிருஷ்டிப்புக்கள் என்பன உட்பட பரந்தளவு துறைகளை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இத்துறையின் தொழில்சார் நிபுணத்துவ தரத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டும் தொழில்சார்ந்தோரின் ஒழுக்கவியல் நடத்தைகளைப் பேணுவதற்காகவும் பல்வேறு நாடுகளினால் பல்வேறு நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் 1993இல் தடயவியல் கணக்கீட்டு அமெரிக்க சபை நிறுவப்பட்டது. 2016இல் ஐக்கிய இராச்சியத்தில் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் தடயவியல் கணக்காய்வாளர் சான்றளித்தல் சபை நிறுவப்பட்டது.

மேலும், தடயவியல் கணக்காய்வுத் துறையின் அபிவிருத்தி, வேறுபட்ட நிறுவனங்களினால் வேறுபட்ட வகையிலான தகைமைகள் அறிமுகப்படுத்தப்படுவதனை நிர்ப்பந்தித்தது. தடயவியல் கணக்காய்வுத் துறையின் தரத்தினைப் பேணுவதற்கும் மேம்படுத்துவதற்குமாக இந்நிறுவனங்கள் மிக முக்கியமான பங்கினையாற்றுகின்றன. அத்தகைய தகைமைகளை வழங்குகின்ற நிறுவனங்கள், தொடர்பான தகைமைகளுடன் கீழே தரப்படுகின்றன.

தடயவியல் கணக்காய்வுத் துறையின் தொடர்ச்சியான மேம்பாடும் அபிவிருத்தியும் அநேக பாரிய கணக்கீட்டு நிறுவனங்களை அவற்றின் நிறுவனங்களுக்குள்ளே தனியான தடயவியல் கணக்காய்வுப் பிரிவுகளை நிறுவுவதற்குத் தூண்டின. வெளியிடப்பட்ட தகவல்களின்படி அத்தகைய கணக்கீட்டு நிறுவனங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன:

ஏர்னஸ்ட் அன்ட் யங்	பேக்கர் ரில்லி
கேபிஎம்ஜி	மோரே ஸ்ரீபன்ஸ்
பிறைஸ்வோற்றர்ஸ் கூப்பர்ஸ்	மாசார்ஸ்
1. டிலொயிட் ரச் ரொமற்சு லிமிடெட்	ஹெய்ன்ஸ் வற்ஸ்
கிறான்ட் தோன்றன்	குறோவி கிளாக் வையிற்கில்
பீடிஓ	சவ்வறி சாப்னஸ்
ஆர்எஸ்எம் ரெனோன்	பெக்பீஸ் ரையினோர்
சிமித் அன்ட் வில்லியமஸ்சன்	யுஎச்வை கக்கர் யங்

தடயவியல் கணக்காய்வு ஏன் அவசியம்?

தடயவியல் கணக்காய்வு பின்வருமாறான அநேக நடவடிக்கைகளுடன் தொடர்புபடுகிறது:

- **மோசடிகளைப் புலனாய்வு செய்வதற்கு** - குறிப்பிட்ட தரப்பினர் நிதியியல்/ தனிப்பட்ட நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் திட்டமிடப்பட்ட சட்டத்திற்கு மாறான குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது மோசடி என அழைக்கப்படுகிறது. இது வேண்டுமென்றே தவறாக வழிநடத்தப்படுகின்ற நடவடிக்கையாக இருப்பதுடன் இது பிழையான நடவடிக்கைகளை மேற்கொள்வோருக்கு நியாயமற்ற நன்மைகளை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மோசடிகளை வங்கித்தொழில், உண்மைச் சொத்து, முதலீடு, காப்புறுதி, வரி போன்றன உட்பட எந்தவொரு துறையிலும் காணமுடிவதுடன், தற்பொழுது இது நிதியியல் துறையில் மிகப் பொதுவாகக் காணப்படுகிறது. மோசடி நடவடிக்கைகளைத் தனிப்பட்டவர்களும் அதேபோன்று வியாபார நிறுவனங்களும் மேற்கொள்ள முடியும்.

- **ஊழலைப் பரீட்சிப்பதற்கு** - ஊழல் என்பது அதிகார நிலைமை ஒப்படைக்கப்பட்டுள்ள ஆளொருவரினால் அல்லது நிறுவனமொன்றினால் தனியாளொருவரின் அநுகூலத்திற்காக சட்டத்திற்கு மாறான நன்மைகளைக் கையேற்பதற்காக அல்லது அதிகாரத்தினைத் தவறாகப் பயன்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நேர்மையீனமான அல்லது மோசடியான ஒரு வடிவமாகும். இது இலஞ்சம், அழுத்தம், நட்பு, பாரபட்சம், குறுகிய மனப்பான்மை, நற்காரியம் சார்ந்தவை, சந்தைப்படுத்தல் செல்வாக்கு தவறான கையாடல்கள் மற்றும் அதிகாரத்தினைத் தவறாகப் பயன்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

- **சொத்துக் கையாடல்களைப் புலனாய்வு செய்தல்** - இது பரந்தளவில் காணப்படும் ஏமாற்று வடிவங்களிலொன்றாகும். இது காசினைக் கையாடல், இல்லாத ஊழியருக்கு/ வழங்குநர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்தல், உருவாக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்தல், சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தல் இருப்புக்களை/பொருட்பட்டியல்களை கொள்ளை அடித்தல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்குகிறது.

- **நிதியியல் கூற்றுக்களின் தவறான கூற்றுக்களைப் பரீட்சித்தல்** - நிதியியல் கூற்றுக்களின் தவறான கூற்று என்பதன் பொருள் தொடர்ச்சியாக போனஸ்சைப் பெறுதல், இலக்குகளைப் பெற்றுக்கொள்வதனைக் காட்டுதல், சம்பள அதிகரிப்புக்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பதவி உயர்வு போன்ற சில குறிக்கோள்களை எய்தும் பொருட்டு உண்மையான நிலைமையிலும்

பார்க்கச் சிறந்த நிதியியல் செயலாற்றத்தினைக் காட்டுதல் என்பதாகும். நிதியியல் கூற்றுக்களின் தவறான கூற்று கணக்கீட்டுப் பதிவேடுகளை வேண்டுமென்றே பிழையான தாக்குதல், செலவுகளைத் தவிர்த்தல், வருமானத்தினை மிகையாகக் காட்டுதல், பொறுப்புக்களைத் தவிர்த்தல்/ குறைத்துக் காட்டுதல் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தாதுவிடல் அல்லது நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் தேவைப்பாடுகளைப் பிரயோகிக்காமை என்பனவற்றினூடாக இடம்பெறுகின்றது

தடயவியல் கணக்காய்வுச் செய்முறை

தடயவியல் கணக்காய்வொன்றின் செய்முறை கிரமமான நிதியியல் கணக்காய்வொன்றினைப் போன்றதேயாகும். சந்திப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான கட்டங்கள், கணக்காய்வினைத் திட்டமிடுதல், டிஜிட்டல் தடயவியல் உட்பட கணிசமான நடவடிக்கை முறைகளை மேற்கொள்ளுதல், சான்றுகளைச் சேகரித்தல் மற்றும் தடயவியல் கணக்காய்விற்கான மேலதிகக் கட்டமொன்றுடன் அதாவது நீதிமன்றத்திற்குச் செல்லும் சாத்தியம் உட்பட, அறிக்கை எழுதுதல் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

சந்திப்புக்களை ஏற்றுக்கொள்ளும் கட்டத்தில், தடயவியல் கணக்காய்வாளரினால் பின்வரும் விடயங்கள் பரிசீலனையில் கொள்ளப்படல் வேண்டும். நேர்மையானதும் பாரபட்சமற்றதுமான புலனாய்வினை மேற்கொள்ளும் பொருட்டு தடயவியல் கணக்காய்வாளரானவர் வாடிக்கையாளர் அதன் முகாமைத்துவம் அதேபோன்று அதன் தொடர்பான தரப்பினர்களிடமிருந்து சுயாதீனமான ஒருவராக எப்பொழுதும் இருத்தல் வேண்டும். எனவே, கணக்காய்வாளர் தடயவியல் கணக்காய்வினை நடத்துவதற்கான அழைப்பொன்றினைப் பெறும் பொழுதே முதல் நடவடிக்கையாக கணக்காய்வாளர் சுயாதீனமானவராக இருப்பாரா என்பதனையும் அத்துடன் கணக்காய்வாளர் தேவையான தேர்ச்சி, நிபுணத்துவம், அறிவு மற்றும் அத்தகைய கணக்காய்வினை மேற்கொள்வதற்குத் தேவையான தடயவியல் கருவிகள் என்பன உள்ளிட்ட இயலாற்றலைக் கொண்டிருக்கின்றாரா என்பதனையும் மதிப்பிட்டுக் கொள்ளுதல் வேண்டும். தடயவியல் கணக்காய்வாளர் அத்தகைய ஏற்பாடுகளுடன் திருப்தியுடையவராகக் காணப்படும் போது மாத்திரமே கணக்காய்விற்கான அழைப்பு ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

திட்டமிடுகின்ற கட்டத்தில், பின்வரும் குறிக்கோள்களை எய்தும் பொருட்டு கணக்காய்வாளர் கணக்காய்விற்குத் திட்டமிடல் வேண்டும்.

- மோசடியினை அடையாளம் காணுதல்
- மோசடி இடம்பெற்ற காலப்பகுதியை மதிப்பிடல்
- மோசடியை எவ்வாறு உள்ளடக்குதல்/ இரகசியமாக வைத்திருத்தல் என்பதனை அறிந்து கொள்ளுதல்
- மோசடியைப் புரியும் தவறிழைப்பவர்களை அடையாளம் காணுதல்
- மோசடியின் விளைவாக ஏற்பட்ட இழப்புக்களைக் கணித்தல்
- நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்க தொடர்பான சான்றுகளைத் திரட்டுதல்
- அத்தகைய மோசடிகள் எதிர்காலத்தில் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் வழிமுறைகளையும் விதந்துரைத்தல்

உண்மையினை உறுதிப்படுத்துகின்ற நடவடிக்கை முறைகளை மேற்கொள்ளுதல் என்பதன் கருத்து நடைமுறை அம்சங்கள் மற்றும் தடயவியல் கணக்காய்வின் கள வேலைகள் எனப் பொருள்படும். இந்நிலையில் கணக்காய்வாளர், கணக்காய்விற்குட்பட்டுள்ள நிறுவனத்தின் அல்லது தனிப்பட்டவரின் ஆவணப்படுத்தல் மற்றும் தகவல்களின் முழுச் செய்முறைகளையும் மீளாய்வு செய்கிறார். உண்மையான விடயங்களை அவதானிக்கும் பொருட்டும் முடிவிற்குவரும் பொருட்டும் தடயவியல் கணக்காய்வாளர் டிஜிட்டல் கணக்காய்வு உட்பட உள்ளகக் கட்டுப்பாடுகளின் காத்திரமான தன்மை பகுப்பாய்வு நடைமுறைகளை மேற்கொள்ளுதல் மென்பொருள் நிகழ்ச்சித்திட்டங்களை ஆற்றுதல் என்பனவற்றை மதிப்பீடு செய்வார் என்பதுடன் தேவையானவிடத்து நேர்காணல்களையும் மேற்கொள்வார்.

சான்றுகளை சேகரிக்கின்ற கால கட்டத்தில் சேகரிக்கப்பட்ட சான்றுகள் போதுமானவையாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்கனவாகவும் தவறிழைத்தவர்களின் அடையாளத்தினை நிரூபிப்பதற்குப் போதுமானதாகவும் அதேபோன்று மோசடியின் விபரங்களுக்கு ஆதரவளிப்பதாகவும் இருத்தல் வேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட இழப்புக்களைக் கணிப்பதற்கான சான்றுகளும் மோசடியினால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஆதரவான ஆவணச்சான்றுகளும் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும். தருக்க முறையிலான சான்றுகள் மோசடியினையும் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளையும் புரிந்துகொள்வதற்கு நீதிமன்றத்திற்கு உதவும். சான்றுகளைத் திரட்டுவதற்கு கணக்காய்வாளர் பின்வரும் உத்திகளைப் பயன்படுத்தலாம்:

- மோசடி இடம்பெறுவதற்குக் காரணமான குற்றங்களை அடையாளம் காண்பதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பரீட்சித்தல்.
- கணனி முறைமையில் மாற்றப்பட்டிருக்கின்ற குறிப்பிட்ட விபரங்களின் நேரத்தினையும் அமைவிடத்தினையும்

அடையாளம் காண்பதற்கு கணனியின் உதவியுடனான கணக்காய்வு உத்திகளைப் பிரயோகித்தல்

- டிஜிட்டல் தடயவியல் மற்றும் தடயவியல் தரவுகளைப் பயன்படுத்தல்
- ஊழியர்களுடனும் தொடர்பான தரப்பினர்களுடனும் கணக்காய்வுகளையும் நேர்காணல்களையும் நடத்துதல்
- குரல் பதிவுகள், தொலைபேசிப் பதிவுகள் போன்ற இலத்திரனியல் சான்றுகளை ஆய்வுசெய்தல்.
- கூட்டக் குறிப்புக்கள், கணக்கீட்டுப் பதிவுகள், பற்றுச்சீட்டுக்கள், வங்கிக் கூற்றுக்கள் போன்ற மற்றைய ஆவணச்சான்றுகளைப் பகுப்பாய்வு செய்தல்.

மேலும், சேகரிக்கப்பட்ட ஆவணங்களும் ஏனைய சான்றுகளும் சேதப்படுத்தப்படாமலும் மாற்றல் செய்யப்படாமல் அல்லது எவரேனுமாளினால் திருத்தப்படவில்லை என்பதனையும் உறுதிப்படுத்தும் விதத்தில் போதுமான பாதுகாப்பினை எடுக்குமாறு தடயவியல் கணக்காய்வாளரைக் கேட்டுக் கொள்வது முக்கியமானதாகும்.

தடயவியல் கணக்காய்வுச் செய்முறையின் பெறுபேறு என்பது இறுதி அறிக்கையாகும். வாடிக்கையாளர் வழக்கொன்றைத் தொடுப்பதற்குத் தீர்மானிப்பாராயின் நீதிமன்றத்தில் கட்சிக்காரர் பயன்படுத்துகின்ற சான்று இதுவாகவே இருக்கும். குறைந்தபட்சம் அறிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

- கணக்காய்வின் கண்டறியப்பட்டவைகள் மற்றும் அவதானிக்கப்பட்டவைகள்
- மோசடி எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பதன் விபரணம்
- சேகரிக்கப்பட்ட சான்றுகளின் தொகுப்பொன்று
- இதேபோன்ற மோசடிகள் எதிர்காலத்தில் இடம்பெறுவதனைத் தவிர்ப்பதற்கான யோசனைகள் மற்றும் விதந்துரைப்புக்கள்

ஏனைய வகைக் கணக்காய்வுகளுடன் ஒப்பிடுகையில், தடயவியல் கணக்காய்வின் மிக முக்கியமானதும் தனித்துவமானதுமான பண்பு யாதெனில் நீதிமன்ற விசாரணைகளுக்கு அவசியமான ஆதரவனை வழங்குவதேயாகும். தடயவியல் கணக்காய்வாளர் சேகரிக்கப்பட்ட சான்றுகளையும் சந்தேக நபர்களை குழுவினர் எவ்வாறு அடையாளம் கண்டனர் என்பதனையும் விளக்குவதற்காக நீதிமன்ற விசாரணையின் போது பிரசன்னமாக இருப்பது அவசியமாகும். கணக்காய்வாளர் சிக்கலான கணக்கீட்டுப் பிரச்சனைகளையும் கணிப்புக்களையும் எளிமையப்படுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் சட்டம், கணக்கீட்டு அல்லது கணக்காய்வு நியதிகளைப் புரிந்து கொள்ளாத ஆட்களுக்கு மோசடிகளைத் தெளிவாகப் புரிய வைப்பதற்காக நீதிமன்றத்தில் பாமரனுக்கு அவனது மொழியில் விளக்கமளிக்கக்ககூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

இன்றைய உலகில் தடயவியல் கணக்காய்வாளரின் வகிபாகம்

பல்வேறு காரணிகளின் காரணமாக, இன்றைய சூழ்நிலையில் குறித்துரைக்கப்பட்ட சட்ட அறிவுடன் கூடிய தடயவியல் கணக்காய்வாளரின் சிறப்பியல்பு வாய்ந்த தேர்ச்சிக்கு மிகப்பெரிய கேள்வி காணப்படுகிறது.

- **சிக்கல் வாய்ந்த வழக்காடல்களுக்கு உதவி**

  இன்றைய நிதியியல் மோசடிகளில் பெரும்பாலானவற்றின் புலன்விசாரணைகளை எடுத்துரைப்பதற்கு சிறப்பியல்பு வாய்ந்த அறிவு தேவைப்படுகின்றது. சிக்கலான நிதியியல் மோசடிகளை வெளிப்படுத்துவதன் மூலமும் நீதிவான்கள், சட்ட அறிஞர்கள் மற்றும் கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் அவர்களுக்கு அவற்றைத் தொடர்பூட்டுவதன் மூலமும் கணக்காய்வாளர்கள் அவற்றைத் தெளிவுபடுத்தலாம்.

- **அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் புலன்விசாரணைகளுக்கு ஆதரவளித்தல்**

  தடயவியல் கணக்காளர்களின் புலனாய்வு இயலாற்றல்களை நியம சிவில் பிணக்குகளுக்கு மட்டுமன்றி அரசாங்கத்தினால் நடத்தப்படும் பாரிய நிதியியல் புலனாய்வுகளுக்கும் பயன்படுத்த முடியும். வரி வழக்குகள், பொது நிதிகளைத் தவறாகப் பயன்படுத்துவது தொடர்பான புலன்விசாரணைகள் மற்றும் பொது நிதிகளைக் கண்டறிதல் என்பன தொடர்பான புலன்விசாரணைகளுக்கும் பங்குச் சந்தை/ அரச பிணையங்கள் சந்தைகளை வேண்டுமென்றே சிருஷ்டித்தல் பற்றிய பரீட்சிப்புக்களுக்கும் பயன்படுத்த முடியும்.

- **மோசடிகளைத் தடுப்பதற்கும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கும் வசதியளித்தல்**

  இந்நாட்களில் மோசடிகளைத் தடுக்கும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் வழிகாட்டுவதற்கும் உதவுகின்ற விதத்தில் அரச துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் இரண்டிற்கும் தடயவியல் கணக்காய்வு நிபுணத்துவத்திற்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. மோசடிகள் இடம்பெற்றதன் பின்னர் புலன்விசாரணைகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் பணத்தினைச் செலவளிப்பதனை விட, முன்னெச்சரிக்கை வழிமுறைகளும் தடுத்தல் நடவடிக்கைகளும் கூடுதலானளவிற்கு நன்மையபயக்கும். தடயவியல் கணக்காளரை, உள்ளகக் கட்டுப்பாட்டுச் சூழலின் காத்திரமான தன்மையினை மதிப்பீடு செய்து

கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளலாம். தொடர்ச்சியான உள்ளகக் கணக்காய்வுகளூடாக அவர்கள் முறைமையில் காணப்படும் குறைபாடுகள் கண்டறியக்கூடியதாக இருக்கும்.

தடயவியல் கணக்கீடு எழுச்சியூட்டுகின்றதும் வெகுமதியளிக்கக் கூடியதுமானதொரு தொழிலாகும். இத்தொழில்சார் நிபுணர்கள் நிதியியல் மோசடிகளை அடையாளம் காண்பதற்கும் பகுப்பாய்வுகளை வழங்குவதற்குமாக தமது அறிவு, நிபுணத்துவம் மற்றும் புலனாய்வுத் தேர்ச்சி என்பனவற்றைப் பயன்படுத்திக் கொள்வதுடன் இது சட்ட வழக்குகளுக்கும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரியளவிலான மோசடிகளைக் குறைப்பதற்கும் உதவும்.

பிரசுரிக்கப்பட்ட தடயவியல் கணக்காய்வு வழக்குகள்

பெரும்பாலான நேரங்களில், பொது அதிகாரவரம்பொன்றிற்குள் இருக்கும் தடயவியல் கணக்கீட்டு வழக்குகள் பொதுவாக பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதனால் அத்தகைய வழக்குகளின் உதாரணங்களைக் கண்டறிவது சவால்மிக்கதாகவுள்ளது. எனினும், மிகப் பிரபல்யமான தோற்றப்பாட்டினைக் கொண்ட வழக்குகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

- **அல் கபோன்சின் வரிகள்**

  முன்னர் விபரிக்கப்பட்டவாறு அல் கபோன்ஸ் 1920 இற்கும் 1930 இற்குமிடையில் இருந்த மிகப் பிரபல்யமான ஆயுததாரியாவான். அவர் புலனாய்வு பெடரல் பணியக முகவரையும் புலனாய்வாளர்களையும் ஏய்க்கக்கூடியவராக இருந்தார். எனினும், இப்பெயர்பெற்ற ஆயுததாரி இறுதியில் கணக்காளரொருவரினால் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டார்.

- **சேர் போல் மைக்காட்னி மற்றும் ஹீதர் மில்ஸ் விவாகரத்து**

  சேர் போல் மைக்காட்னி புகழ்பெற்ற ஆங்கிலப் பாடகராவர். அவர் விவாகரத்தினைப் பெற்ற வேளையில் அவரது உடமையில் எவ்வளவு பணம் இருந்தது என்பது பற்றிய சர்ச்சையொன்று தோன்றியது. அவர் தனது சொத்தின் பெறுமதி ஸ்ரேலிங் பவுண் 400 மில்லியன் என வாதிட்டார். எனினும், அவரது மனைவி ஹீதர் மில்ஸ் இன்படி அவரின் சொத்தின் பெறுமதி ஏறத்தாழ ஸ்ரேலிங் பவுண் 800 மில்லியனாகக் கருதப்பட்டது. ஆகவே, ஹீதர் அவரின் சொத்தின் பெறுமதியினைப் பரீட்சிப்பதற்காக தடயவியல் கணக்காளர் குழுவொன்றினை நியமித்ததுடன் வழக்கினையும் தொடுத்தார். எனினும், நீதிமன்றத் தீர்ப்பின்படி மைக்காட்னியின் சொத்துப் பெறுமதி ஸ்ரேலிங் பவுண் 450 மில்லியன் எனவும் ஏறத்தாழ ஸ்ரேலிங் பவுண் 800 மில்லியன் அல்ல எனவும் குறிப்பிடப்பட்டது.

- **றொபட்ஸ் மக்ஸ்வெல்லின் கையாடல்**

  ஐரோப்பிய பிரசுரகர்த்தாவான றொபட்ஸ் 1991இல் அவர் இறக்கும் வரை பங்குடமையாளர் மற்றும் கட்சிக்காரர்களின் நிதியிலிருந்து பல ஆண்டுகளாக கையாடல்களைச் செய்திருந்தார். அவர் காலமாகியதனை அடுத்து அவரது கம்பனி பெரும்பாலும் மோசடி நிதியிடல் மற்றும் கடன்களினால் கட்டியெழுப்பப்பட்டிருந்தமையினால் வங்குரோத்து நிலைமைக்காளானது. தடயவியல் கணக்காளர் குழுவானது முழுக் குழப்பநிலைமைக்கும் தீர்வு காண்பதற்கு 14 ஆண்டுகளைச் செலவிட்டதுடன் மக்ஸ்வெல் ஏறத்தாழ 1 பில்லியன் டொலர்களைக் கையாடியிருந்தமையினை எடுத்துக்காட்டியது.

- **என்றோன் அவதூறு**

  என்றோன் அவதூறு வரலாற்றிலேயே மிகப் புகழ்பெற்ற பிணையங்கள் மோசடியில் ஒன்றாகும். 1980 களின் நடுப்பகுதிக்கும் 2001 இற்குமிடைப்பட்ட காலப்பகுதியில் என்றோனின் கணக்கீட்டுக் குழு அதன் நிறைவேற்று அலுவலர்களுடன் சேர்ந்து “விசேட நோக்கங்களுக்கான நிறுவனங்களை” உருவாக்கியதனூடாக முறிவடைந்த செயற்றிட்டங்களில் ஏற்பட்ட மில்லியன் கணக்கான இழப்புக்களை மறைக்கக்கூடியதாக இருந்தது. கம்பனியின் பங்குகள் ஓராண்டிற்குள் 90 இற்கு மேற்பட்ட டொலர்களிலிருந்து 1 டொலருக்கு வீழ்ச்சியடைந்ததன் பின்னர், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு புலனாய்வொன்றினைத் தொடங்கியது. என்றோனின் நிதியியல் கூற்றுக்கள், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தடயவியல் கணக்காளர்களினால் மிகக் கவனமாகப் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் என்றோனினால் பெரும் எண்ணிக்கையான உருவாக்கக் கணக்கீட்டு உத்திகள் பயன்படுத்தப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. இவ்வுருவாக்க கணக்கீட்டு உத்திகள் படுகடன்களை மறைத்தல், பங்கு விலைகளை வீங்கச்செய்தல் நிதியியல் பதிவேடுகளைத் தவறாக்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

- **வோர்ள்ட் கொம் ஏமாற்று**

  வோர்ள்ட் கொம் என்பது சிறந்த செயலாற்றத்தினைக் காட்டிய 1990 களில் வளர்ச்சி வாய்ப்புக்களைக் கொண்டிருந்த ஒரு தொலைத்தொடர்பூட்டல் கம்பனியாகும். இத்தொழில் துறையில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சி அதேபோன்று சில முன்மொழியப்பட்ட இணைப்புக்கள் முறிவடைந்து போனமை என்பனவற்றின் காரணமாக கம்பனியின் நிலைமை 2000ஆம் ஆண்டுப்பகுதியில் மோசமடைந்தது. இந்நிலைமை மேலும் மோசமடைந்தமையின்

காரணமாக, நடைமுறைப் பங்கு விலைகளைப் பேணும் பொருட்டு கம்பனிமுகாமைத்துவம், வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பினை மறைக்கும் ஒரு முயற்சியாக மோசடியான கணக்கீட்டு முறைகளுக்குத் திரும்பியது. இது கணக்காய்வாளர்களுக்கு சமிக்ஞையாக அமைந்தது. கம்பனியின் முகாமைத்துவம் டொலர் 3.8 பில்லியனுக்கும் கூடுதலான பெறுமதிகளுக்காக மோசடியான பதிவுகளை மேற்கொண்டிருந்தமையினை கணக்காய்வாளர்கள் பின்னர் கண்டறிந்தனர். இப்பதிவுகள் மீண்டெழும் செலவினத்தினை மூலதனச் செலவினமாகப் பதிவுசெய்யப்பட்டமை, போலியான ஒதுக்கப்படாத வருமானக் கணக்குகளூடாக வருமானத்தினை வீங்கச் செய்தமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

- **அமெரிக்க இன்ரநஷனல் குறூப் இன்ரநஷனல் - அமெரிக்க இன்ரநஷனல் குறூப் தலைமை அலுவலக மோசடி**

  இம்மோசடியானது 2000 திசெம்பரிலிருந்து 2001 மாச்சு காலப்பகுதியில் இடம்பெற்றது. பிழையான மீள்காப்புறுதிக் கொள்கையொன்றினை உருவாக்கும் பொருட்டு 2000 திசெம்பரில் அமெரிக்க இன்ரநஷனல் குறூப் "ஜெனரல் றி இன்சூரன்ஸ் கோப்பரேஷன்" என அழைக்கப்பட்ட மற்றொரு கம்பனியுடன் தொடர்ச்சியாக மோசடியான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டது. இறுதியில் தடயவியல் நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான புலனாய்வுகளின் அடிப்படையில் அமெரிக்க இன்ரநஷனல் குறூப் மோசடியான கொடுக்கல்வாங்கல்களின் அடிப்படையில் மோசடியான கணக்கீடுகளுக்காக குற்றவாளியாகக் காணப்பட்டது.

இலங்கையில் தடயவியல் கணக்காய்வு

தடயவியல் கணக்காய்வுத் தொழில் ஒப்பீட்டுரீதியில் இலங்கையில் ஒரு புதிய துறையாக விளங்குவதுடன் இதற்கான நிபுணத்துவத்தினையும் தேர்ச்சியையும் இனிமேல் தான் அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் இத்துறையில் நிபுணத்துவத்தினையும் தேர்ச்சியையும் கட்டியெழுப்புவதில் முக்கிய வகிபாகத்தினை ஆற்றுகின்றது. இது, தொடர்பில் நிறுவகம் பல சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்களையும் பயிற்சி அமர்வுகளையும் அறிமுகப்படுத்தியிருக்கிறது. இவ்வபிவிருத்திகளுடன் சேர்ந்து பல பாரிய கணக்கீட்டு நிறுவனங்களும் அவற்றின் நிறுவனங்களுக்குள்ளேயே அவற்றின் சொந்த தடயவியல் கணக்காய்வுப் பிரிவுகளை நிறுவுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

இலங்கை மத்திய வங்கி, பன்னாட்டு அனுபவத்தினையும் உலகளாவிய பயிற்சிகளையும் கொண்டுள்ள தடயவியல் கணகக்காய்வாளர்களின் நிபுணத்துவத்தினைப் பயன்படுத்தி ஒரு சில தடயவியல் கணக்காய்வுகளை அண்மையில் மேற்கொண்டது. இக்கணக்காய்வுகள் "2015.02.01 இலிருந்து 2016.03.31 வரையான காலப்பகுதியில் திறைசேரி முறிகளின் வழங்கல் தொடர்பான புலனாய்வு மற்றும் விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை" இல் வழங்கப்பட்ட விதந்துரைப்புக்களுக்கு இணங்கிக் கொள்ளும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், இவ்வறிக்கையானது, இக்காலப்பகுதியில் திறைசேரி முறிகளின் வழங்கலுடன் தொடர்பான பல தரப்பினர்களினதும் தொலைபேசி அழைப்புப் பதிவுகளின் அடிப்படையில் இலங்கை பொலிஸ் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட டிஜிட்டல் தடயவியல் கணக்காய்வு பற்றிய விபரங்களையும் உள்ளடக்கியிருக்கிறது. பகிரங்கமாகக் கிடைக்கத்தக்க தகவல்களின்படி, இலங்கையின் வரலாற்றில் நடத்தப்பட்ட முதலாவது டிஜிட்டல் தடயவியல் கணக்காய்வாக இது காணப்படுகின்றது.

மேலும், நிதியியல் நிறுவனங்கள் ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் அதேபோன்று நிதியியல் நிறுவனங்கள் அவற்றிற்குத் தேவையான வேறுபட்ட அளவுகளில் தமது தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்காகவும் இலங்கையின் கணக்காய்வாளர்கள் தடயவியல் கணக்காய்வுகளை மேற்கொண்ட பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருக்கின்றன. கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களமும் அரச துறையில் அதன் செயற்பரப்பிற்குட்பட்ட விதத்தில் தடயவியல் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. எவ்வாறெனினும், இக்கணக்காய்வுகளின் திருப்திகரமான தன்மை, அவதானிப்புக்கள் மற்றும் விதந்துரைப்புக்கள் தொடர்பில் பகிரங்கமாகக் கிடைக்கத்தக்க தகவல்களும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே காணப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள்

http://www.forensicglobal.org

https://www.investopedia.com

https://www.affluentcpa.com

http://public-information.xaviermedia.com

https://accounting.fau.edu/blog/forensic-accounting

https://opinionfront.com/biggest-accounting-scandals-of-all-time

"A History of Forensic Accounting" (2014), Kristen Dreyer, Grand Valley State University